


# முத்திதழ்

நீ. நான்.. நாம்...

முத்திதழ் – 03

மார்ச் 10 2021

முதுசத் தொகுப்பு




## நூற்றாண்டு காணும் மூதூர் மத்திய கல்லூரி...




## மூதூர் கரையோர மக்களின் அபிலாசை...?

ரூ. 70/=

மாதாந்த சிற்றிதழ்

மாதாந்த இதழ்

# முத்திதழ்

முத்துப்படைப்புகளின் தொகுப்பு

Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk

SCAN ME

## எம்மவர் ஆளுமைகளின் அடையாளம்

www.muththizhal.com +94 740818782 Mutur Muththizhal



ஒன்லைன் மூதூர் வாசிகசாலை

Pdf வடிவிலான e-BooK, சஞ்சிகை, Gazette, பாடசாலை புத்தகங்கள், Exam Papers, சிறுகதை புத்தகங்கள், சிறுவர் நூல்கள், நாவல்கள், ஆய்வுகளுக்கான உசாத்துணை நூல்கள், கட்டுரைகள், இணைப்புகள் மற்றும் நாளாந்த இலங்கை பத்திரிகை என்று பல்வேறு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள **Online Mutur Library** என்ற **WhatsApp Group** ஐ நாடுங்கள்.

நீங்களும் இணைய விரும்பினால் 0717891887, 0771663140 என்ற இலக்கத்திற்கு Online Mutur library என்று WhatsApp Message அனுப்புங்கள்.

Online Mutur Library

Mutur GetNo
Developed by NGT Lanka

மூதூர் கெட் னோ – என்றால் மூதூரில் உள்ள அனைத்து விதமான கடைகள், அலுவலகங்கள், கல்லூரி, நிலையங்கள், வர்த்தக நிறுவனங்கள், வாகன ஓட்டுநர்கள், மத அனுஷ்டானங்கள், இன்னும் பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை தொடர்பு கொள்ளக்கூடிய தகவல்களை இந்த இணையத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

GET IT ON Google Play

GetNo Lanka
Www.getno.xyz.lk
+94 77 53 995 31






முத்திதழ்
நீ.. நான்.. நாம்...
இதழ்-03 மார்ச் 15 2021




Pages - 28
Size - A4
Location - Mutur
Category - Magazine
Layout By - Sanoos.tm
Adz Partner - Rv Production

Conatct - +94 740818782
Gmail - muththizhal.lk@gmail.com
Social Media - Muththizhal
Address - Periya Palam, Mutur.

பிரதம ஆசிரியர்
JUNAID MOHAMED IHSHAN

ஆசிரியர் குழாம்
Nawas Rawshan Mohamed
Iqbal Mohamed Roshan
Abdul Cader Mohamed Asmy

Rs : 70/=

மூதூர் கரையோர மக்களின் அபிலாசை — பக் 12

நியுட்ரோன் நட்சத்திரம் — பக் 06

கல்வியியலார்களும், சிந்தனையாளர்களும் அரசியலில் நுழையவேண்டும். — பக் 07

அல்முபஸ்ஷிரா - சமூக நிறுவனம் — பக் 14

பெண்ணியல் பக்கம் — பக் 16

மக்கள் தொண்டன் – மகாலிங்கம் — பக் 23

வழிக்கொழிந்தவை — பக். 09

ஒரு நாள் கூலியாகும் தனியார் வகுப்புக்கள் — பக். 17

தகவல் அறியும் சட்டம் — பக். 09

SECURITY AWARENESS OF SMART PHONE USERS — பக். 17

நூற்றாண்டு காணும்
## மூதூர் மத்திய கல்லூரி



## ஆசிரியர் மடல்

மூதூரில் கடந்த சில நாட்களாக தொடராக நீர் வெட்டு நடந்த வண்ணமே உள்ளது இதற்கான தீர்வு தான் என்ன ?

முன்கூட்டிய அறிவித்தல் ஏதும் இன்றி நீர் வெட்டு அமுலாக்கப் படுகின்றது இதனால் எத்தனை குடும்பங்கள் சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகிறது என்று அறிவீர்களா ?

மூதூரில் இயங்கிக்கொண்டிருக்கின்ற எத்தனையோ முகநூல் ஊடகவியல் பக்கங்கள் உள்ளது அவர்களுக்கு முன்கூட்டிய தகவல்களை வழங்கினாலாவது இருக்கின்ற நேரங்களில் போதுமான நீரினை சேகரித்துக் கொள்வார்கள்.

மூதூரில் உள்ள எத்தனையோ அமைப்புக்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களுக்கென ஓர் முகநூல் பக்கத்தில் தங்களின் சேவைகளினை வழங்கிக் கொண்டிருக்கின்றனர் இவ்வாறு Mutur Water Board ஊழியர்களினால் செயற்படுத்த முடியாதா ? உங்களால் முடியவில்லை என்றால் உள்ளூர் ஊடகங்களுக்கு தகவல்களை முன்கூட்டி வழங்கினால் அவர்களின் மூலமாவது மக்களுக்கு தெளிவூட்டப்படுமே இதனைக் கூட உங்களால் நடைமுறைப்படுத்த முடியாதா ?

வசதியுள்ளவர்கள் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரினை கொள்வனவு செய்து கொள்வார்கள் அதற்கும் வழியில்லாத சராசரி குடும்பங்களின் நிலையிற்கு யாரு தான் பதில் சொல்வது..

இனிமேல் சரி இவ்வாறான நீர் தடைகளை முன்கூட்டி மக்களிடம் தெரிவிக்க ஏதேனும் முயற்சிகளை மேற் கொள்ளுங்கள் .

பொறுப்புவாய்ந்தவர்களே இது உங்களின் கவனத்திற்கு!

# மாதமொரு வேலைத்திட்டம்

### புத்தகங்கள் கையளிப்பு



இம்மாதத்திற்கான வேலைத்திட்டப் பகுதியில் நெய்தல் நகர் சனசமூக நிலையத்திற்கு சொந்தமான நூலகம் மீள் திறப்பு செய்யப்படவுள்ள நிலையில் நிர்வாகத்தின் மூலம் விடுக்கப் பட்ட கோரிக்கையினை கருத்திற்கொண்டு முத்திதழ் குழுமம் சார்பில் இன்று (5) ஒருதொகை நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது.

### அடிப்படை உதவி வழங்கல்



**UNI Designing Excellency** கட்டுமான நிறுவனத்தின் உதவியுடன் இஸ்லாத்தை புதிதாக ஏற்ற நடுத்தீவு கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் குடும்பமொன்றுக்கு மலசலகூட திருத்தவேலை செய்து கொடுக்கப்பட்டது.



### தேசிய மட்ட போட்டிக்கு பங்கேற்பு



மூதூர் பஹ்ரியா நகரைச் சேர்ந்த **Latheef Mohamed Nasrin** திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் இடம்பெற்ற (2021/03/06) மாகாண மட்ட கட்டழகர் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய ரீதியான கட்டழகர் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் கடந்த 5 ஆண்டுகள் மேலாக கட்டழகர் போட்டிக்கு தன்னை தயார்படுத்திவந்த இவர் இம்முறை மாகாணமட்டத்தில் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பன்மைத்துவம் கொண்ட பல்துறைகளில் எமது ஊரைச் சேர்ந்தவர்கள் முயற்சித்து சாதிக்க முன்வரவேண்டும். இவர் தேசிய ரீதியிலும் சாதனைகள் படைக்க வாழ்த்துகளும் பாராட்டுக்களும்...!

**முத்திதழ் சஞ்சிகை சார்பில் முன்கூட்டிய வாழ்த்துகள்**

Best Wishes!



### நான்காம் இடம் பெற்று சாதனை

27 ஆவது வருடாந்த அகில இலங்கை கட்டுரைப்போட்டியில் **Risvi Fathima Simana** அவர்கள் நான்காம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

Lions Clubs International அனுசரணையுடன் போதைவஸ்து "துஸ்பிரயோகத்தை தடுப்பதில் இளம் தலைமுறையின் பங்களிப்பு" என்ற தலைப்பில் தி/மூ/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் இம் மாணவி இந்த தேசிய சாதனையை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி மாணவியை பயிற்றுவித்த MA.Anees அவர்களுக்கும், குறித்த மாணவியின் பெற்றோருக்கும் எமது முத்திதழ் குழுமத்தின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | அமரா முஹம்மது ஷரீப் |
| பிறப்பு | : | 1944/Nov/08 (76) |
| பதவி | : | ஓய்வுநிலை அதிபர் |
| கணவன் | : | ஏ.எம்.புஹாரி |
| பொழுதுபோக்கு | : | வாசிப்பு |
| பாடசாலை | : | மூதூர் மத்திய கல்லூரி , அந்நஹார் ம.வி, அல்ஹிதாயா ம.வி, |

# நேர்காணல்



நேர்கண்டவர் :
இஹ்ஸான் ஜே.எம்.ஐ

**உங்களை பற்றிய அறிமுகத்தை கூறுங்கள் ...**

எனது கல்வி வாழ்வியலில் நான் எப்போதுமே முதலாம் நிலை மாணவியாகவே இருந்துள்ளேன். சராசரி பெண்ணாக என்னால் அக்காலத்தில் இருப்பது கடினமாக இருந்தது. இதனால்தான் என்னால் கல்விப்புலத்தில் இந்த அளவு தூரம் கடந்திட வாய்பாகியது. அந்தவகையில் புலமைப்பரிசில் பரிட்சையில் அல்-ஹிதாயா பாடசாலையில் முதலாவது புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவியாகவும், அந்நஹார் மகாவித்தியாலயத்தில் முதலாவது சேர்விலக்க மாணவியாகவும் தொடர்ந்தும் அப்பாடசாலையில் முதலாவது ஆசிரியராகவும் அதனைத் தொடர்ந்து அப்பாடசாலையில் முதலாவது அதிபராகவும் கடமையாற்றியுள்ளேன். அத்தோடு கல்வியல் கல்லூரியில் மூதூரில் இருந்து முதலாவது தேர்வு செய்யப்பட்ட பெண் மணியும் நானே ஆகும்.

அக்காலத்தில் சமூக மட்டத்தில் இருந்த பெண்கள் மீதான அதிக ஆதிக்கத்தை நான் முகம் கொடுத்ததை போன்று இங்குள்ள யாரும் முகம்கொடுத்திருக்க முடியாது என்று என்னால் உறுதியாக கூறமுடியும். நான் கல்வி பயில ஆரம்பித்தது முதல் அதிபராக ஓய்வுநிலை அடையும் வரை நான் எதிர்கொண்ட சவால்கள் பல்விதம். இருந்த போதும் என்னாலும் இயலும் என்ற தன்னம்பிக்கையுடன் இன்றுவரை எனது முயற்சியை சாதனையாக்கியே வைத்துள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்!

**பெண் ஆளுமையாக சமூகத்தில் உள் நுழைந்த போது உங்களின் வரவு சமூக மட்டத்தில் எந்த அளவுக்கு ஆதரவை ஆதிக்கத்தையும் உண்டாக்கியது ?**

எனது காலத்தில் பெண்கள் அடுப்பூதும் வேலைக்கு தகுதியானவர்கள் என்ற சித்தாந்தம் இருந்து வந்துள்ளது இந்த சித்தாந்தத்தை முற்றுமுழுதாக தகர்த்தெறிந்த ஒரு பெண்ணாக எண்ணி நான் அடையாளப்படுத்திக் கொண்டேன் இதற்கு முற்று முழுதாக எனக்கு உறுதுணையாக தந்தையும் எனது குடும்பம் இருந்தது குறிப்பாக சமூகத்தில் பெண்கள் தலை நிமிர்த்தபடுவதற்கான ஒரு முன்னோடியாக நான் இருந்துள்ளேன் என்று இன்று பெருமைப்படுகின்றேன்.

அந்நஹார் பாடசாலையை அதிபராக பொறுப்பேற்கும் போது எனக்கு பல்வேறு சவால்களும் எதிர்ப்புகளும் சமூகத்தின் உண்டாகியன. இருந்தபோதும் பெண்கள் இந்த சமூகத்துக்கு அளிக்கவேண்டிய தங்களின் ஆற்றல்களும் ஆளுமைகளும் என்னுடைய வெளிக்காட்டப்பட வேண்டும் என்ற தூர நோக்கு இலக்கோடு எனது பயணத்தை முன்னோக்கி எடுத்துச் சென்றேன். இதன் விளைவாக இன்று பல்வேறு துறைகளில் பெண்களின் பங்குபற்றல் இம்மூதூர் மண்ணில் காணமுடிகின்றது.

**உங்கள் கல்வி பயணத்தில் நீங்கள் இன்றளவும் நீங்காத நினைவாகவுள்ள விடையத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

43 ஆண்டுகள் எனது கல்வி சேவையை தொடர்ந்துள்ளேன். இன்று ஓய்வு நிலையில் உள்ளேன். இக்காலப் பகுதியில் எத்தனையோ ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு எனது கல்வி அறிவை அளித்துள்ளேன். இன்று பலர் என்னை சந்திக்க வரும் போதே அதனை நான் உணர்ந்து கொள்கின்றேன்.

நீங்காத நினைவு என்றால் அதிபராக பொறுப்பேற்க பாடசாலைக்கு நியமனக் கடிதம் கிடைத்து மூன்று நாட்களின் பின்னர் வருகை தந்தும் கூட என்னை பாடசாலையை பொறுபேற்க விடாமல் தடுத்தனர். அதுமட்டுமன்றி ஊர் முழுவதும் என்னை அவப்பெயர் கொண்டு விமர்சிக்கத் தொடங்கியது மட்டுமன்றி என்னை இழிவாக சித்தரித்து துண்டுப் பிரசுரமும் வெளியிட்டார்கள். இருந்த போதும் நான் எனது கடமையை சரிவரச் செய்து பணி நிறைவின் போது சமூகத்தின் அக்கீகாரம் பெற்ற ஒரு அதிபராக வெளியேறியுள்ளேன்.

**உங்களின் பனிக்காலத்தில் நீங்கள் ஆற்றிய சேவைகள் பற்றிக் கூறுங்கள்?**

- பாடசாலையில் கலை இலக்கிய மன்றங்களில் பெண்களின் பங்கு பற்றுதலை அதிகரித்து காட்டினேன்.
- ஆரம்ப பிரிவு பெண் மாணவர்களுக்கான ஆடை வடிவமைப்பை அறிமுகப் படுத்தினேன்.
- இறால்குழி, அந்தோனியா பாடசாலை மாணவிகள் பலர் எனது களத்தில் அந்நஹார் பாடசாலையில் கல்வி கற்பதற்கான வளங்களை ஏற்படுத்தினேன்.
- பாடசாலைக்கான நூலக வசதியை உண்டாக்கினேன்.
- மூதூரில் முதலாவது சுற்றுலாவுக்காக மாணவர்களை அழைத்துச் சென்றமை

**எமது சமூகத்திற்கு நீங்கள் எத்திவைக்க விரும்பும் செய்தி என்ன?**

சமூக பங்குபற்றுதலில் பெண்களின் வகிபாத்திரம் உறுதி செய்யப்பட வேண்டும். அவர்களின் ஆன்மாக்களுக்கு மதிப்பளித்து அவர்களின் ஆளுமை, திறன், ஆற்றல்களை வெளிப்படுத்தும் தளத்தையும் சந்தர்ப்பத்தையும் நாம் உருவாக்கவேண்டும்.

குறிப்பாக பெண்கள் தங்களின் அறிவாற்றலை மேம்படுத்த வாசிப்பு, எழுத்து மற்றும் கலை இலக்கிய பணிகளில் தங்களின் ஈடுபாட்டை அதிகரிக்க வேண்டும். இன்று பல பெண்கள் ஏதொவொரு அரச உத்தியோகம் மட்டும் பெற்றுக் கொண்டால் போதும் என்ற குறுநிலை மனோவியலோடு பயணிப்பதை காணமுடிகின்றது. இதனால்தான் அரச அலுவலகங்களில் பெண்கள் நிரம்பி வலிகின்றார்கள். ஆனால் உயர்மட்ட அரச அதிகாரிகளாக பெண்களின் சதவீதம் குறை வாகவுள்ளதும் இந்த நிலைப்பாட்டினாலேயேதான். இது மிக ஆபத்தான குறிகாட்டியாகும்.

எங்களின் காலத்தில் இருந்த சடவாத சிந்தனைபோன்று இன்றில்லை. பல வாய்ப்புகளுக்கான வசதிகளும் வாயல்களும் திறக்கப்பட்டுள்ளது. இதனை சாதுர்யமாக பயன்படுத்திக்கொள்ள இளம் சமூகம் முன்வரவேண்டும்.

இதற்காக இன்றுள்ள சமூகத் தலைமைகள் முறையான வழிகாட்டல்களைக் கொடுக்க எத்தனிக்க வேண்டும் என்பதே எனது அவா.

# நியூட்ரோன் நட்சத்திரங்கள் (Neutron Star)



சூரியனைவிட 4-5 மடங்கு திண்மம் வாய்ந்த பெரு நட்சத்திரம் ஒன்று அணு இணைவு மூலம் எரிந்து முடிந்து சுபர்நொவாவாக (Supernova) வெடித்துச் சிதறும்போது எஞ்சியிருக்குக் கருவை நாம் நியூட்ரோன் நட்சத்திரம் என்கிறோம். வெடிப்பின் போது இவ்வாறு 90% எடையும் எரிந்து முடிக்கப்பட எஞ்சியிருக்கும் 10% எடையாகிய புரொட்டோன்களூாம் (Hydrogen ion)



**Niyas Aasha Falin**
Reading in B.Sc
SEUSL

எலெக்ட்ரோன்களூாம் இணைந்து நியூட்ரோன்களைத் தருகின்றன. இவை தொடர்ந்தும் அணு இணைவு மூலம் எரிக்கப்பட முடியாதவை.

> “ பெரிய நட்சத்திரங்கள் தங்கள் சக்தியை வெளியேற்றி இறந்து போதலின் பின்னர் மீதமாக எஞ்சும் அமைப்பே நியூற்றோன் நட்சத்திரம் ”

நியூட்ரோன்களைத் தவிர நியூட்ரினோ என்னும் வகைத் துகள்களும் அண்டத்துள் வீசப்படுகின்றன, வெளிநோக்கித் தள்ளூாம் வாயு அமுக்கம் எரிவின் பின் இல்லாமற் போய்விட உண்ணோக்கித் தள்ளும் ஈர்ப்பு மட்டுமே இப்போது வேலை செய்கிறது. இந்த அமுக்கம் கடுமையானது எரிந்து முடிந்தபின் ஒரு சூரியன் அளவு பரிமாணத்திலிருக்கும் நட்சத்திர கரு எச்சமானது (Burnt-out core) இதன்பின் நிகழும் உள்நொருங்கல் மூலம் ஒரு நகரத்தின் பரிமாணமளவுக்கு ஒடுங்கி விடுகிறது. அதன் அடர்த்தி மிகமிக கடுமையாகிறது.


வெடித்த சுபர்நோவாவிலிருந்து நியூட்ரோன் நட்சத்திரத்துக்கு மாற்றப்பட்ட அதிர்வலை ஆற்றல் காரணமாக அது சுழல ஆரம்பிக்கின்றது. இவ்வாறான சுழல்வு நிமிடத்துக்கு 700 தடவைகள் வரை போகலாம். என்பது மட்டுமன்றி இவை மிகவும் துல்லியமான சுழல்வுகள் என்பதனால் எதிர்காலத்தில் விண்வெளியில் நேரம் பார்ப்பதற்கு சீசியம் அணுவின் அதிர்வுகளைப் பயன்படுத்தாமல் நியூட்ரோன் சுழல்வுகளைப் பயன்படுத்தலாம் என்று இயற்பியலாளர்கள் இப்போது எண்ணுகிறார்கள்.

இவை இவ்வாறு சுழல்வதனால் உருவாகும் இவற்றின் ஆற்றல்மிக்க காந்த மண்டலங்கள் அண்டத்துள் வெகு பிரகாசமான ஒளிக் கற்றைகளை வீசுகின்றன. சுழல்வு காரணமாக விட்டு விட்டுத் தெரியும் (ஒளிரும்) இந்த மினுக்கல்களைக் கொண்ட நட்சத்திரங்களை நாம் பல்சார் (துடிப்பு) நட்சத்திரங்கள் என்கிறோம். இந்த நியூட் ரோன் நட்சத்திரங்களின் அடர்த்தி எவ்வளவு என்று கேட்டால் இந்த திண்மத்தில் ஒரு தேக் கரண்டி அளவினதின் எடை ஒரு பில்லியன் (பத்துக் கோடி) மெட்ரிக் டொன்கள் என்றாகிறது. இந்த நட்சத்திரம் ஒன்றின் மீது நீங்கள் உணரும் ஈர்ப்பு விசை பூமியினதைப் போல் 2 பில்லியன் மடங்குகளாகும். இதன் காந்த மண்ட லத்தின் பலம் பூமியின் காந்த மண்டலத்தைப்போல் 3 ட்ரில்லியன் (300 கோடி) மடங்காகும்.

இன்னும் பெரிய வேடிக்கை என்னெவெனில் இப்படியான சில நியூட்ரோன் நட்சத்திரங்களில் இதனை விடவும் ஆயிரம் மடங்கு பலமான காந்தமண்டலங்களுள. இந்த வகை நியூட்ரோன் நட்சத்திரங்களை மக்னெற்றார் (Magnetar) என்கிறோம். இப்படியான மக்னெற்றார்களிம் பூமி நடுக்கம்போல் நட்சத்திரநடுக்கம் (ளுவயச-ஙரயமந) ஏற்படுவதுண்டு அப்போது வெளிவிடப்படும் சக்தி அளப்பரியது. ஒரு விநாடியின் பத்திலொரு பங்கில் இவ்விதம் வெளிவிடப்படும் ஆற்றலானது எமது சூரியன் 100,000 ஆண்டுகளில் வெளிவிடும் ஆற்றலை விடவும் மிக அதிகமாகும்.

இதுவரை நாமறிந்த பெரியதும் அடர்ந்ததுமான நியூட்ரோன் நடசத்திரம் எமது சூரியனப்போல் 2.14 மடங்கு எடையானது அதன் விட்டம் வெறும் 20 கிலோமீட்டர்கள் தான், இது தான் ஒரு நியூட்ரோன் விண்மீன் சமாளித்து நிலைக்கக்கூடிய அதிக பட்சக் கீழெல்லை அதன் பின்னர் ஒரு கருந்துளையாகிவிடும்.

சிலசமயங்களில் ஒன்றை ஒன்று சுற்றிவரும் இரு நியூட்ரோன் விண்மீன்கள் ஒன்றை ஒன்று மோத நேர்ந்தால் பயங்கரமான அளவு ஆற்றல் வெளிப்பாட்டுடன் அவை இணையும் இந்த நேரங்களிற் கருந்துளையொன்றும் உருவாகலாம். மாறாகப் பிளாட்டினம் தங்கம் யூரேனியம் போன்ற பாரமான தனிமங்களும் உருவாக்கப்பட்டுத் தூசிகள் வாயுக்களுடன் அண்டை வெளியுள் வீசப்படலாம். இவ்வாறு ISM (Inter Stellar Medium) உள்ளே வீசப்பட்ட முகில்கள் நம்முடைய சூரியமண்டலப் பக்கம் வந்தால் அதனைத் தன்னந் தனியாகக் கையாள முயலாதீர்கள். எனக்கும் சொல்லி வையுங்கள்.



# இஸ்லாத்தில் சகவாழ்வு

Co-Existence in Islam

**Ash.sheikh N.Hasan Ziyath ( Naleemi)**
Project manager,
Mercy Lanka.





இன்று அதிகமாக பேசப்படுகின்ற தலைப்புகளில் ஒன்றாக பல்லின சமூகத்தில் சகவாழ்வு என்பது மாறி இருக்கின்றது.

இஸ்லாம் மார்க்கம் அது சுமந்து இருக்கும் பெயரைப் போலவே வரலாறு நெடுகிலும் சாந்தி, சமாதானம், சகவாழ்வு போன்றவற்றை மக்கள் மத்தியில் விதைத் திருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

பிற சமூகங்களுடன் மோதல்களைத் தவிர்த்து சகிப்புத் தன்மையுடனும் விட்டுக்கொடுப்புடனும் வாழு மாறு அது மக்களைப் போதிக்கிறது. மாத்திரமல்லாமல் நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுக்கும் விடயத்தில் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஒத்தாசையோடு செயற்படு மாறும் அது மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

இஸ்லாம் மனித குலத்தை ஒரே தரத்தில் வைத்துத் தான் பார்க்கிறது. அது மனித குலம் குறித்து மிக முக்கிய மான ஒரு அடிப்படையை முன்வைக்கிறது.

*"நிச்சயமாக நாம் உங்களை ஒரே ஆண் ஒரே பெண்ணிலிருந்து படைத்தோம் பின்னர் நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்"* ஸூரத்துல் ஹுஜுராத்: 13

எனவே உலகில் உள்ள எல்லா மனிதர்களும் மதிக்கப் பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் மிக முக்கியமான நிலைப்பாடு. அதனால்தான் அல்குர்ஆனில் பின்வருமாறு பிரஸ்தாபித்து கூறப்படுகின்றது.

*"நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப் படுத்தினோம் இன்னும், கடலிலும், கரையிலும் அவர் களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்க ளையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப்படுத்தினோம்.* பனீ இஸ்ராயீல்: 70

ஒரு சர்வதேச தூதை சுமந்த சமூகம் என்ற வகையில் பிற சமூகங் களுடன் முரண்பாடுகளுக்கு மத்தியில் இணக்கப்பாட்டுடன் எவ்வாறு வாழலாம் என்பது குறித்து மிக சீரியஸாக சிந்தித்து செயலாற்ற வேண்டிய மிக முக்கியமான ஒரு காலப் பகுதியைத்தான் நாம் கடந்து கொண்டிருக்கிறோம். கருத்து முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள், சிந்தனை சிக்கல்கள், சிந்தனை முகாம்கள் என்பவற்றுக்கு அப்பால் நின்று ஒரு பொதுத் தளத்தில் எல்லோரும் சேர்ந்து செயலாற்றுவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை வகுப்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

எமது சமூகம் தங்களுக்கு மத்தியில் உள்ள சிறு சிறு முரண்பாடுகள், கருத்துவேறுபாடுகள், தனி மனிதர்களுக்கு இடையிலான முரண் பாடுகள், குழுக்களுக்கிடையிலான மோதல்கள் எல்லாவற்றைத் தவிர்த்து செயற்படுகின்றபோது இந்த நாட்டில் வாழுகின்ற பிற சகோதர சமூகங்களுடன் சுமுகமான ஒரு சக வாழ்வைப் பேணுவதற்கு அது வழிகோலும். இந்த நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு பிரஜையும் இந்த சிந்தனையோடு செயற்பட்டால் எமது நாட்டில் ஒரு சுபீட்சமான, நிம்மதியான சமுதாயத்தை கட்டி எழுப்புவது மிக இலகுவான காரியமாக அமையும்.

---

# கல்வியலாளர்களும், சிந்தனைவாதிகளும் அரசியலுக்குள் நுழைதல் வேண்டும்



**HABLULLAH BUHARY**
Freelance Writer

கடந்தமாத தொடரில் குறிப்பிட்டது போலும், அரசியலை ஓர் சமூகப் பொறுப்பாக உணர்தல் சமூக அரசியல் மாற்றத்திற்கான அடிப்படையாக அடையாளப்படுத்துவதுடன், அரசியலை ஒவ்வொருவரும் தமக்கான பொறுப்பாக ஏற்றுக் கொள்ளும் போது அரசியலானது சமூக பங்கேற்வுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவும் வாய்ப்பேற்படுகின்றது ஆனாலும் துரதிஸ்திடவசமாக, சமூகத்திலுள்ள படித்த, அறிவுபடைத்த மக்களும் கூட அரசியலை மூன்றாம் கண் கொண்டு நோக்குவ தானது அரசியலை இன்னுமின்னும் அதள பாதாளத்தை நோக்கி இட்டுச் செல்கின்றதெனலாம்.

மேற்படி கற்றிந்த மக்களும், சிந்தனைவாதிகளும் கூட அரசிய லைவிட்டும் தூரமாவதானது, சிறுமைப்பட்டவர்களிடமும், கொந்தராத்துக் காரர்களிடமும் மற்றும் பிற பணம்சார்ந்த பின்னணிகளை உடையவர்களிடமும் அரசியல் சிக்குண்டு சின்னாபின்னமாகிப் போவதற்கும், அரசியல் பற்றிய சமூக கட்ட மைப்புகளிலுள்ள எதிர்மறை எண்ணங்களை அதிகப்படுத்தவும் ஏதுவாக அமைந்து விடுகிறது. அதுவே பிற்காலங்களில் பொறுப்புக்கூறும் பிரதான பாத்திரத்தை வகிக்கக்கூடிய அரசியலை சமூகத்தை விலைபேசுன்ற சீர்கெட்ட அரசியல் கலாச்சாரத்தை நோக்கி நகர்த்திச் செல்லவும் செய்கின்றது.

மேலும், கல்வியலாளர்களும், சிந்தனைவாதிகளும் அரசியலுக்குள் தங்களை நுழைவித்துக் கொள்ள முற்படுகின்ற அதேவேளை, அரசறிவியலின் அடிப்படைகளையும் சித்தாந்தங்களையும் மக்களுக்கு விளக்கி, சிறந்த மக்கள் பங்கேற்புடன் கூடிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கும் பெரும் பணியையும் நிறைவேற்ற முன்வர வேண்டும். இதனையே கி.மு 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, அரசிலுக்கான அடிப்படைகளை விபரித்த பிளேட்டோ தனது அக்கடமி எனும் கல்விக் கூடம் மூலமும், அவ்வாறே அரிஸ்டோட்டில் லைசியம் எனும் நிலையம் மூலமும் செய்துள்ளார்கள். ஆனாலும் அந்த சமூகப்பணியானது இன்றைய சமூகங்களுக்கடையில் அற்றுப்போனமையே சமூகத்தின் அரசியல் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக முன்வைக்க முடிகிறது.

குறிப்பாக அரசியலும், அரசறிவியல் சார்ந்த கொள்கை முன்வைப்புகளும் முற்றிலும் வேறுபட்டவை ஒருவர் அரசியலுக்குள் நுழைவதற்கு, அரசறிவியல் பற்றிய கற்கை தொடர்பான அறிவை அவர் பெற்றிருக்க வேண்டிய அவசிய மில்லை. ஆனாலும் சமூகக் கட்டமைப்பில் வினைத்திறன் மிக்கதோர் அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்த அரசறிவியலின் அடிப்படைப் பண்பு களை மக்கள் மத்தியில் விதைகக் வேண்டியது தவிர்க்கப்பட முடியாத ஒன் றாகும். அதாவது அரசறிவியலானது, ஆய்வு செய்தல், விபரித்தல் மற்றும்

# மூதூர் மீனவர்களும் அபிவிருத்திப் பங்காளர்களும்

**தொடர் - ii**



அவை மாத்திரமின்றி சட்டமுறையற்ற விதத்திலான மீன்பிடி, மீன்பிடிப்பதற்கு தேவையான உரிய உபகரணங்கள் இல்லாமை, உரிய தொழிநுட்பம் தெரியாமை, புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகமின்மை, வளரக்கூடிய அல்லது குஞ்சிடும் நிலையில் உள்ள மீன்கள் பிடிக்கப்படுகின்றமை, சட்டவிரோதமான முறையில் நீர்நிலைகளை மூடப்படுதல், குளங்களில் இட்டு வளர்க்கக்கூடிய மீன் குஞ்சுகள் கிடைக்காமை ஆகிய எமது செயற்பாடுகளும் மீன் உற்பத்தி குறைவடைவதற்கான பிரதான காரணங்களாக காணப்படுகின்றன. இவைகள் மாத்திரமன்றி மீன் உற்பத்திக் குறைவுக்கு




**ஏ. எஸ். எம். பாயிஸ்,**
**திட்டமிடல் பணிப்பாளர் .**
**சுகாதார அமைச்சு, கி.மா**


கடற்பாசி முகாமைத்துவம் சீரின்மை, சேவை வழங்குனரின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மற்றும் மீன்வர்களினதும் ஏனைய பொதுமக்களினதும் மனோநிலை ஆகியவற்றையும் குறிப்பிடலாம்.

அடுத்த முக்கிய பிரச்சனையான குறைந்த சந்தைப்படுத்தல் முறைமையும் பெறுமதிசேர் உற்பத்தியில் ஈடுபடாமையும் என்பதனை நோக்கும்போது எமதூரில் பிடிக்கும் மீன்களை சந்தைப் படுத்துவதற்காகவும், அதனை தேவைகளுக்கு அமைய பாவிப்பதற்குமான எவ்வித வசதிகளும் இன்மையால் அதிகமாக மீன்பிடிக்கும் காலங்களில் மீன் விலை குறைவடைவதோடு மீனவர்களுக்கு உரிய விலை கிடைக்காமலும் செல்கின்றது. சில சமயங்களில் அதிகமாக பிடிக்கப்படும் மீன்கள் வீசப்படுவதும், மிகக்குறைந்த விலைக்கு வெளியூர் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுவதும் சாதாரணமாக நடந்தேறும் செயற்பாடுகளாகும்.

இவ்வாறானதொரு நிலைமை காணப்படுவதற்கான பிரதான காரணமாக “எம்மிடம் அவ்வப்போது கிடைக்கும் மீன்களை பெறுமதிமிக்க முறையால் சேமிக்கவோ அல்லது அதனை வேறு வடிவில் தயாரிப்பதற்கோ அல்லது அதன் விலை குறைவடையாமல் வெளியூர்களில் விற்பதற்கான எந்த வசதிகளும் இல்லை“ என மீனவர்கள் குறிப்பிடும் அதே நேரம் இதுவே உற்பத்தியின் பின்னரான அழிவினை அதிகரிக்க வாய்ப்பளிக்கின்றது என்றும் கருதுகின்றனர்.

அதேபோல் நன்னீர் மீன்பிடியும் இறால், நண்டு மற்றும் மட்டி உற்பத்தியும் நலிவுற்று காணப்படுவதையும் ஓர் முக்கிய பிரச்சனையாக குறிப்பிடலாம். இதற்கு பிரதான காரணங்களாக குளங்கள் மற்றும் ஆறுகள் பல்வேறு மனித தேவைகளுக்காக அடைக்கப்பட்டமை, அவைகள் மீண்டும் புனரமைக்கப்படாமை, இத்துறையில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படாமை, அதிக மூலதனம் இன்மை, இத்துறை தொடர்பான பரந்த அறிவின்மை போன்றனவற்றைக் குறிப் பிடலாம்.

இவ்வாறு மீன்பிடி உற்பத்தி குறைவடைதல், வினைத்திறனற்ற உற்பத்தித் திறன் குறைந்து காணப்படுதல், குறைந்த சந்தைப்படுத்தல் முறைமை, பெறுமதி சேர் உற்பத்தி இன்மை, நன்னீர் மீன்பிடி நலிவுற்றமை ஆகியன, அத்தொழிலில் ஈடுபடுபவர்களின் வருமானத்தை குறைவடையச் செய்கின்ற அதே நேரம், ஒரு நிலையற்ற வருமானத்தையும் ஏற்படுத்துகின்றது. இதனால் திட்டமிட்ட முறையில் வாழ்க்கையை நடாத்தமுடியாத நிலைக்கு எம்மூர் மீனவர்கள் மாத்திரமன்றி நாட்டின் பல்வேறு பகுதி மீனவர்களும் தள்ளப் பட்டுள்ளனர்.

வருமானம் குறைவுக் கான காரண மாக மேலுள்ள அனைத்தையும் குறிப் பிடும் அதே நேரம் இம் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர் பான பிரச்சனைகளும் இங்கு கவனிக்கத்தக் கது. பொது வாக மீன் பிடிக்கிராமங் களில் காணப்படும் உட் கட்டமைப்பு சீரின்மை அதாவது பாதை, குடிநீர், மின்சாரம் மற்றும் வீடுகள் என்பன போன்ற அத்தியவசியமான தேவைகள் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது ஓர் குறை அபிவிருத்தியையே காட்டி நிற் கின்றன. அதே போல் கடலரிப்பு, கல்வி மற்றும் சுகாதார வசதியின்மை போன்ற முக்கிய பிரச்சனை களும் இப் பகுதியில் காணப்படுகின்றன.

மீனவர்களில் அதிகமானோர் சொந்த மூலதனமின்றி அன்றாட வருமானத் திற்காக மீனவத்தொழிலாளியாக பணிபுரிகின்றனர். மீன் பிடித் தொழிலில் முதலீடு செய்திருக்கும் எமதூர் மீனவர் களிடமும் அதிகமான முதலீடுகள் இன்மையாலும் கிடைக்கத்தக்களவு அல்லது சொற்பமான முதலீட்டைக் கொண்டு தொழில் செய்வதனாலும், அதிக வருமானம் ஈட்டமுடியாத நிலையில் உள்ளனர். அதிகமான மீனவர்களுக்கு ஒழுங்கான தோணிகள், மீன்பிடி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இல்லாத நிலையிலேயே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் உள்ள மீன்பிடிக் கிராமங்களில் Multi boats இல்லாத கிராமங்கள் ஒரு சிலவற்றில் மூதூரும் ஒன்று.

இதனால் ஆழ்கடல் மீன்பிடி எமதூரில் மிகக்குறைவாகவே உள்ளன. அபிவிருத்திப் பங்காளர்கள் மீன்பிடிக்கான முதலீட்டை உருவாக்குதல் என்பதே மிக முக்கியமான தேவையாக உள்ளது. மீனவர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல், மீன வர்களுக்கு Multi Boats பெற்றுக் கொடுத்தல், வாடிகளை அமைத்து மீன்கள் மொத்த விற்பனையை உறுதிப்படுத்தல், மீன்பிடியுடன் இணைந்த

தொழிலான கருவாட்டு பதனிடுதல், சிற்றுண்டிக் கடைகள் நடாத்துதல், மீன்பிடிப் பொருட்கள் விற்பனை போன்றவற்றிற்கு வசதிகள் செய்து கொடுப் பதன் மூலம் மூதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் சிறப்பானது.

அதேபோல் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவோர்களையும் கவனத்தில் எடுப்பதுடன் குளங்களின் மீன்குஞ்சுகளை விடுதல், குளத்தை மீன்பிடிப்பதற்கு ஏற்றால் போல் புனர்நிர்மாணம் செய்தல் போன்ற விடயங்களில் அதிக கவனமெடுப்பதுடன் இறால்பிடிக்கும் இடங்களை அடையாளப்படுத்தி, விருத்தி செய்வதுடன், இறால் பண்ணைகளை அமைக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதோடு, நண்டு வளர்ப்புக்கான கூடுகளை தயாரித்து மீனவர்களுக்கு வழங்குதல் மற்றும் இறால், நண்டு, மட்டி வளர்ப்பில் புதிய தொழில் நுட்பத்தை வழங்குதல் போன்ற விடயங்கள் ஊடாக Aqva கலாச்சாரத்தை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அது மாத்திரமன்றி மோட்டார் திருத்தும் நிலையங்கள் அமைத்தல், மோட்டார் திருத்தும் பயிற்சிகள் வழங்குதல், படகு தயாரிக்கும் நிலையங்களை (லுயசன) அமைத்தல் போன்ற செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும்.

**தொடர்ச்சி 25 ஆம் பக்கம்**



# உங்களுடன் ஒரு நிமிடம்



S.M. Isar

**க.பொ.தர சாதாரன தர பெறுபேறு ஓரிரு மாதங்களில் வந்துவிடும்**

எங்க வாப்பாக்கு ஆசை வர்த்தகப்பிரிவு ! பக்கத்து வீட்டுக்காரனோ படிக்கப்போறான் பொறியியல் பிரிவில் ! உம்மா சொல்ரா என்ட மகன் டொக்டரா வந்து எனக்கு கடைசிகாலத்தில் வைத்தியம் பாக்கனும் என்று ! நம்ம உயிருக்கு உயிரான பாடசாலை தோழனோ கலைப்பிரிவில்! இருந்தும் எனக்குள் ஆசை தொழில்நுட்ப துறை.

இது இப்படி இருக்க.....

இன்று எமது உயர் படிப்பை எம்மை சுற்றிய ஆரோக்கிய மற்ற புறக்காரணிகள் அதிகம் தீர்மாணிக்கின்றன. உதாரணமாக விஞ்ஞான பிரிவை வெறும் ஆசையாலும் , வெளிக்கவர்ச்சியாலும் தெரிவு செய்த மாணவர்கள் சில வருடங்கள் கழிந்த பின் சா.... நாம்ம வேறு ஒரு துறையை தெரிவு செய்து இருக்கலாமே என்று மனதிற்குள் கவலை கொண்ட சந்தர்ப்பங்கள் ஏராளம் . ஆனால் அப்போது காலம் தாண்டிய சிந்தனைக்குள் அது அடங்கிவிடும் .

அதையே போல் விஞ்ஞான பிரிவை தெரிவு செய்ய தகுந்த தகுதியும் அர்பணிப்பும் உடைய சில மாணவர்கள் பொருளாதார காரணத்தால் தொடர முடியாமலும் உள்ளனர். அதேதருணம் நல்ல பொருளாதார வளம் இருந்தும் உயர் தரத்திற்கு தகுதி அற்ற பெறுபேறு உடைய மாணவர்களும் இல்லாமல் இல்லை அதாவது கல்லைக் கண்டால் நாயைக் காணோம் நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்ற கதை. இக்கதை அப்படியே இருக்கட்டும் .....

தனது மகனுக்கு இல்லை மகளுக்கு எந்த துறை அவர்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் அவர்களுக்கு எந்ததுறையில் அதிக ஆர்வம் உண்டு என்று பெற்றோர், பாதுகாவலராக இருப்போர் சிந்திப்பது பொருத்தம் மாறாக அவகட பிள்ளை இவங்கட பிள்ளை......வேண்டாம் வேண்டவே வேண்டாம்.

மாணவர்களும் தான் எத்துறையை தெரிவு செய்தால் அது நம்மை வளப்படுத்தும் நாம் எத்துறைக்கு “பொருத்தம் - மிகப்பொருத்தம் “ இரண்டிலும் உள்ள வேறுபாட்டை அறிந்து துறையை தெரிவு செய்தல் சிறந்தது.

மணல்மண் தரையில் நெற்பயிரும் களித்தரையில் கச்சாணும் பயிர் இடுவது சாதரணமாக பொருத்தமாக அமையாது. விளைச் சலை மாத்திரம் சிந்திக்கும் நாம் ஏனோ விளைநிலத்தினை சற்று சிந்திக்க மறந்து விடுகிறோம். தரமான களித்தரையில் கிழங்கு, கச்சானை பயிர் இட்டுவிட்டு விளைநிலத்தினை ஒன்றுக்கும் உதவாது என்று அறுவடை காலத்தில் குற்றம் சொல்வதை நிறுத்தி விட்டு சற்று திட்டமிடப்பட்ட சிந்தனையுடன் காய் நகர்த்துவதன் மூலம் எதிர் காலத்தில் சிறந்த கல்வித்துறை சார்ந்த சமுகத்தை எதிர்பார்க்கலாம்.

இன்று எல்லோர் மனதிலும் இடம்பிடித்துள்ள ஐசாக் நியூட்டனுக்கு மொழி அரிச்சுவடியையும் திருவள்ளுவர்க்கு கணிதம் அறிவியல் இயந்திரவியலையும் கண்டிப்பாக புகுத்த நினைத்து இருந்தால்.......

இன்று நாம் அனைவரும் ஒரு வைத்தியனையும் ஒரு பொருளியல் ஆளனையும் பார்க்கும் எமக்குள் அவர்களுக்கு பின்னால் எத்தனை பேர் துறையை தவறாக தெரிவு செய்து தமது வாழ்வில் ஒரு மிக முக்கிய பகுதியான கல்வியில் அடுத்த நகர்வினை தாண்ட முடியாமல் சந்தியிலும் குந்திலும் அடுப்பங்கரையிலும் காலத்தை கழிக்கின்றனர்.

சில வேளை சாதாரண தரத்தில் 7A 2C எடுத்தவன் விஞ்ஞான பிரிவுக்கு பொருத்தமற்றவனாகவும் 2A 4C 3S எடுத்தவன் மிக பொருத்தமானவனாகவும் அமையலாம்.

சாதாரண தர பெறுபேறுகளை மாத்திரம் வைத்து (எத்தனை A) உங்கள் உயர்தர பிரிவை தெரிவு செய்வது சற்று அசாதாரண விளைவினை உண்டுபண்ண வாய்ப்பாக அமைந்து விடும் .

உயர்தரத்தில் நாம் தெரிவு செய்யும் துறையே அதிகளவில் நம்மை எதிர் காலத்தில் அடையாள படுத்தும் ஓர் கருவியாக அமையும் .

தயவு செய்து அதிசிறந்த விறகு வெட்டியிடம் சீமெந்தையும் மண்ணையும் கொடுத்து விட்டு அவன் கட்டிய வீடு என்று சொல்லக்கூடிய ஏதோ ஒன்றை எதிர் காலத்தில் குற்றம் சுமத்த வேண்டாம்.

# தகவல் அறியும் சட்டம்



## இலங்கையின் தேசிய சூழல் சட்டம்
### - அறிமுகம்

அப்துல் ஹமீட் சியாமிலா LLB (Hons.)
சட்டத்தரணி மனித உரிமைகள் மற்றும்
ஜனநாயகப்படுத்தல் முதுமானி சட்ட அதிகாரி
மத்திய சுற்றாடல் அதிகாரசபை



உலகளவில் மனித உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் பாரியளவில் பாதிப்பினை ஏற்படுத்தும் யுத்தம் மற்றும் கொடிய நோய் என்பனவற்றைப்போன்ற காரணங்களில் இயற்கை அனர்த்தங்களுக்கும் மிகப்பெரிய இடமுண்டு. முறையற்ற இயற்கை வளப்பயன்பாடு, சுற்றாடலுக்கு தீங்கினை விளைவிக்கும் பொருட்களின் கணிசமான பாவனை, சுற்றாடல் நேயமற்ற மனித செயற்பாடுகள் மற்றும் முறையற்ற கழிவு முகாமைத்துவம் போன்ற காரணங்களால் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழல் நாளுக்கு நாள் அதன் இயற்கைத்தன்மையை இழந்து வருகின்றது என்பதே கசப்பான உண்மையாகும்.

இவ்வாறான மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக பலநாடுகள் பல்வேறு வகையான சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி உள்ளன. எண்ணற்ற இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்டுள்ள சிறிய தீவான இலங்கையில் சுற்றாடல் மாசுபாடு மற்றும் இயற்கை வளச்சுரண்டல் என்பன பாரிய பிரச்சினையாக மாறி வருகின்றன. முன்னால் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன அவர்களால் 1978 ஆம் ஆண்டில் இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு திறந்த பொருளாதார கொள்கையும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக வியாபிக்கத் தொடங்கிய கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கும் இயற்கை வளத்தினை சுரண்டும் மற்றும் மாசுபடுத்தும் சூழல் நேயமற்ற மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காகவும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் 05 பகுதிகளை உள்ளடக்கியதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

- பகுதி I : மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஸ்தாபிப்பு மற்றும் சுற்றாடல் ஆலோசனை சபையின் (Environmental Council) உருவாக்கம்.
- பகுதி II : அதிகாரசபையின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகள்.
- பகுதி III : அதிகாரசபையின் ஊழியர்கள்
- பகுதி IV : சுற்றாடல் முகாமைத்துவம் - Environmental Management (இயற்கை வளங்கள், வனங்கள், வனசீவராசிகள், மண் அரிப்பு, மீன்பிடி.... )

தொடர்ச்சி 25 ஆம் பக்கம்

## மூதூர் முகைதீன்



# வேதத்தீவு



"அப்படியா. அதுதான் உன்னையும் அந்தப்பக்கம் காண ஏழாம இருக்கு" என தனது பதிலை ஒருவித நக்கல் கலந்த பாணியில் கூறியவாறு போய்க்கொண்டிருந்தார் காதர் ஹாஜியார்.

இவர்கள் இருவருக்கும் இடையே உள்ள ஆத்மார்த்த நட்பை காதர் ஹாஜியாரைப் போன்று அனோகமனேர் பொறாமைக் கண்களுடனேயே பார்த்தனர்.

அன்று காலையிலிருந்து ஊரே பர பரப்பில் மூழ்கியிருந்தது ஊர் மட்டுமா நாடே பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தது. அனைவரும் அடிக்கடி வரும் செய்திகளை அறிவதற்காக தொலை காட்சிப் பெட்டிகளின் முன்னாலே காத்தி ருந்தனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களில் குண்டு வெடித்து பல உயிர்கள் பலியான செய்தியால் அனைவரும் கதிகலங்கிப் போயிருந்தனர். மறு நாள் இந்தச்சம்பவத்திற்கான பொறுப்பு முழு முஸ்லிம் சமூகத்தின் மீதும் சுமத்தப்பட்டது. இதனால் அனைத்து முஸ்லிம்களுமே வெளியில் செல்லத் தயங்கினர்.

ஆயுதப் படைகளின் தேடுதல் நடவடிக்கைகள் மிக தீவிரமாக முஸ்லிம் ஊர்களில் முடுக்கிவிடப்பட்டன. மக்கள் பீதியால் பயந்தபடியே நாட்களைத் நகர்த்திக் கொண்டிருந்தனர் ஒருசில தீய சக்திகள் தங்கள் சுயநலத்திற்காகச் செய்த இந்த செயலால் முழு முஸ்லீம்களுமே பாதிக்கப்பட்டனர்

மஹ்மூது நாநா வாழும் பிரதேசம் முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தாலும் இந்த எதிர்பாராத செயல்களால் அனைவரும் அச்சத்துடனே காலம் கழித்தனர். ஒரு நாள் வீட்டிலிருந்து மஹ்மூது நானா வெளியேற ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போது,

"ஏங்க இந்த ஆகாத காலத்தில எங்கே போறீங்க? ஊரெல்லாம் ஆமீ, பொலீஸ் போட்டு செக் பண்றாங்க. நீங்க கட்டாயம் போகத்தான் வேணுமா?" என அவர் மனைவி கேட்டதும்,

"செமாலையைக் கண்டு கதைச்சி கண நாளாப் போவுது புள்ள. அதுதான் ஒரு எட்டு பார்த்திக்கிட்டு வரலாமென்டு போறன்?" கூறி முடிக்கவில்லை அதற்குள் இடைமறித்த அவர் மனைவி,

"என்ன நீங்க சின்னப்பிள்ளை மாதிரி உலகமே தெரியாம இருக்கீங்க? இந்த நேரத் தில வேதக்கார தெருப்பக்கம் போனா சும்மா உடுவாங்களா? இப்பவே எல்லாரையும் சந்தேகத்தோடுதான் பார்க்கிறாங்க? சும்மா.. கிடங்க.." ஒரு எரிச்சலுடன் மனைவி படபட வெனக் கூறிமுடித்தாள்.

மனைவியின் கூற்றிலும் உண்மை இருப்பதை உணர்ந்த மஹ்மூது நாநா ஏதோ சிந்தித்தவராக தனது எண்ணத்தை மாற்றி முற்றத்தில் இருந்த ஊஞ்சல்பலகையில் அமர்ந்து கொண்டார்.

இதே நிலைமைதான் செபமாலைக்கும் இருந்தது. மஹ்மூது நாநாவைச் சந்தித்து கதைக்காமல் இருக்க முடியாமல் அவரின் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

அந்த எண்ணத்துடனேயே வீட்டிலிருந்து வெளியேறி ஆலய வீதிச் சந்தி வழியாகத் திரும்பியவரைக் கண்ட குரூஸ் வாத்தியார்.

"எங்கே செபமாலை இங்காலப்பக்கம் போறா?" என ஒரு சந்தேகத்துடன் கேட்டார்.

"இல்ல மாஸ்டர். நான் கொஞ்சம் இக்பால் வீதிப்பக்கமாக போகணும். நம்மட மஹ்மூது நாநாவைக் கண்டு ஒரு கிழமையாச்சு அதுதான்...." என இழுத்தபோது

"உனக்கென்ன விசறா பிடிச்சிருக்கு அவங்கட ஆட்கள்தான் நம்மட தேவாலயங்களில் எல்லாம் குண்டு வெச்சி ஆக்கள கொன்றிருக்காங்க.. நீ அவங்கட பக்கம் போறா.." என ஒரு கண்டிப்புக் கலந்த தோரணையில் கேட்டதும்,

"இல்ல மாஸ்டர் ஒரு சில ஆக்கள் செஞ்ச வேலையால நாம எல்லோரையும் குத்தம் சொல்லி பகைக்கப்படாது. இந்த ஊரில் இருக்கின்ற சோனக ஆட்களுக்கு இதைப் பத்தி ஒன்றுமே தெரியாது. அவங்க என்ன செய்வாங்க பாவம்..." என செபமாலை கூறியதும்,

"அது சரிதான். அதுக்கு இப்ப நீ போய் என்ன செய்யப் போறாய்..."

"நான் நம்ம மஹ்மூது நாநாவைப் பார்க்கலாமெண்டுதான் போறன். அவரும் என்னைக் காணாம மிச்சம் மனக் கஷ்டத்தில் தான் இருப்பாரு..."

"என்றாலும் நீ இந்த நிலமையில அந்தப் பக்கமெல்லாம் போறது எனக்கு நல்லதா படயில்ல. நான் சொல்லுரதை சொல்லிட்டன்" என முடிவுபட கூறினார் குரூஸ் வாத்தியார்.

"மாஸ்டர் நீங்க சொல்றத்திலயும் நியாயம் இருக்குத்தான். ஆனால் இதுக்கு முதல்ல நடந்த கலவரங்களில் நம்ம வீடு வாசல் எல்லாம் எரிக்கப்பட்ட நேரத்தில் நானும் என் குடும்பமும் மஹ்மூது நாநாட வீட்டில் தான் தங்கியிருந்தோம் அப்போ அவங்க எவ்வளவு சந்தோசமாக் கவனிச்சாங்க. அதுக்கு இப்போ இந்த நிலைமையில அவங்களக் கண்டு ஒரு ஆறுதல் வார்த்தை என்றாலும் சொல்லாட்டா அதைப்போல நன்றி கெட்ட செயல் வேற இல்ல.. இல்லியா" எனக் கூறியவாறு மஹ்மூது நாநாவின் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தார் செபமாலை.

மாதங்கள் பல கடந்தன. யாவும் கடந்து போகும் என்ற யதார்த்தத்தின் படியே நடந்த சம்பவங்கள் அனைத்தும் அனைவ ரினதும் உள்ளத்திலிருந்தும் படிப்படியாக மறையத் தொடங்கின. மக்கள் அனைவரும் முன்னரைப் போல தத்தம் தொழில்களைப் புரிந்து இயல்பாக வாழத் தொடங்கினர்.

இப்போது செபமாலையும் மஹ்மூது நாநாவும் முன்னரைப்போலவே ஒன்றாக வயலுக்குச் செல்வதும், வேலைகளைப் புரிவதுமாக தத்தம் கடமைகளில் கவனமாயிருந்தனர்.

இந்த முறை வேளாண்மை நன்கு விளைந்திருந்தது. கதிர் முற்றிய பருவம். ஆனால் வான்மழை பொய்த்ததால் நீரில்லாமல் பயிர்கள் அழிவடையும் நிலையிலிருந்தன.

சிலரின் முயற்சியின் காரணமாக எப்படியோ மாவிலாறு நீர் வாய்க்கால் வழியாக ஓரளவு வரத் தொடங்கியது. அனைவரும் தத்தம் வயல்களுக்கு நீரை விடுவதற்காக அவசரப்பட்டனர். இதனால் அந்த வேதத் தீவு விவசாயப் பிராந்தியத்திலேயே ஒரு கலவரம் வெடிக்கும் சூழல் உருவாகியது.

விவசாய அதிகாரிகளும் அங்கு வந்து ஆலோசனைகளை நடத்தினர். ஆனால் ஒவ்வொருவருமே தனது வயலுக்குத்தான் முதலில் தண்ணீர் பாயவேண்டும் என்ற சுயநல அடிப்படையில் விடாப்பிடியாக நின்றனர். யாரும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை.

அடுத்த இதழில்...

## கிளி



கூண்டில் இருந்த கிளியிடம் சிட்டு குருவி கேட்டது நீயும் மனிதன் மாதிரி பேச கற்றுக்கொண்டாயே நீயும் மனித இனம் தானே.!

இந்த மனிதர்களுடன் ஒப்பிட்டுப் பேசுகிறாயா? அவர்கள் எவ்வளவு உயர்ந்தவராக இருந்தாலும் அந்த இனத்தார்களுடன் சேர்ந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை என்று சொன்னது.

அட பைத்தியமே அவருடன் இணைவதற்கு தவம் இருந்தாலும் கிடைக்காது அல்லவா ?

நீ பாக்கியவான் என்று சொன்னது சிட்டு. அவருடன் சேர்ந்து அப்க்கியவாளனாக கூடாது என்று தவம் இருக்கிறேன் .

ஏனென்றால் அவர்கள் அடிக்கடி நாவைப் புரட்டி இரண்டு விதமாக பேசுவார்கள் .எனக்கு அப்படி பேச வராது என்று சொன்னது களி .



**மர்ஹூம் எம். ஐ.எம் .மஷ்ஹூர்**
**24.04.69.சிந்தாமணி .**

# மடமையில் வாழாதே...!

ஆடுகின்ற ஆட்டமெலாம்
ஆயுள் வரை நிலைக்குமா
கூடுகின்ற போலி கூட்டமெல்லாம்
குவளயத்தை வெண்றிடுமா .

வாட்டுகின்ற மனிதர் தம்
வதை வாதம் தொடர்ந்திடுமா
மாநிலத்தில் மண்டியிட்ட
மடமை தான் நிலைத்திடுமா

தட்டிப்பறிக்கும் தந்திர வாழ்க்கை
தரணியில் என்றும் நிலைக்காது
தம்பட்டம் தலைக்கணமும்
தரணியில் லென்றும் நிலைக்காது

உண்மையை மறைத்து நீ
உரக்க கத்தினாலும்
வாய்மையே வெல்லும் ஓர் நாள்
வாயடைத்துப் போவாய்

இறுமாப்பு செருக்கு ணமும்
என்னாலும் நிலைக்காது
மண்ணோடு மண்ணாகிப் போன பின்னும்
மறைந்து விடாது பரம்பரைகள் பாவம்


வேஷம் போட்டு உன் வாழ்வை
நாசமாக்கி போடாதே
முகத்திரை ஒருநாள் கிளியும் போது
உயிருள்ள பிணமாய் மறவாதே

பூஜ்ஜியம் தான் வாழ்க்கை என்று
புரிந்துகொள்ளு மானிடா
புண்ணியங்கள் செய்து நல்ல
புகழோடு மறைந்துவிடு.



*மூதூர் சுஹைதா ஏ கரீம்*
வெள்ளவத்தை .


# நிலவுக்குள் நானும் நீயும்



நீ
உனக்குள் நான்
எனக்குள் நீ
நாமிருவரும் நிலவுக்குள்

உன்னைப் பற்றிய என்
எண்ணங்களை
நிலவிடம் சொல்கிறேன்
'அதுவோ'
அனைத்தையும்
சேர்த்து வைத்து
முழுமதியாக
என் எண்ணங்களுக்குப் பிரகாசமூட்டி
உன் முன் நிற்கிறது'
பிரகாசிக்கும் என் நினைவுகளை
நீ எடுத்துக் கொள்ளக் காத்திருப்பாய்
என்றறிந்து'

மறுபடியும் சொல்கிறேன்
உனக்குள் நான்
எனக்குள் நீ
நாமிருவரும் நிலவுக்குள்



**SHAHNAS JUNOOV**
**UNIVERSITY OF EASTERN**
**NAITHAL NAGAR**

# ஓர் மடல்...

வழிநீர் கசிய வரைகிறேன் இம் மடலை!
அன்னை கதீஜாவைப் (ரழி)போல் வாழவுமில்லை..
பாத்திமாவைப்(ரழி) போல் பொறுமையுமில்லை..!
சுமையாவின்(ரழி ) தியாகங்கள் செய்திடவுமில்லை..!

ரப்பே! மண்டியிட்டு மன்றாடுகிறேன்
மன்னித்துவிடு என்னை...!
எவ்வளவு காலம்தான் ஓடிக்கொண்டே இருப்பது?
இந்த அற்ப துன்யாவிற்காய்..
என்ன செய்தேன் மறுமைக்காய்?
விடை இருந்தும் கேள்விகளாய்
என் வாழ்க்கை..!!

உள்ளம் ஊமையாய் அழுகின்றது..
ஸஹாபியப் பெண்களின் வாழ்க்கையில் துளி

அளவேனும் வாழ்ந்திடவில்லை என!

ரஃமானே! உனை சந்திக்கும் அந் நாளில் ,
உனக்காய் செய்தேன் என்று எதைச் சொல்வேன்???
துளி இரத்தமேனும் சிந்தியிருப்பேனா?
உன் மார்க்கத்திற்காய்...

இறுதியாய்...!
ரணப்பட்ட உள்ளத்துடன்
உனக்கே உனக்கான
உன் ஸுஜூதுகளில் வாழ்ந்திடுகின்றேன்!
எனைத் தொலைத்தவளாய்...!!!



**சுமையா பின்த் சுபஹான்**
நொக்ஸ் வீதி,
மூதூர்.

**உங்களது கவிதைகளையும்**
**இப்பக்கத்தில் பிரசுரிக்க விரும்பினால்**
**077 1663140 என்ற**
**வட்ஸ்அப் இலக்கத்திற்கு உங்கள்**
**புகைப்படத்துடன் அனுப்பி வைக்கவும்.**

# வாழ்வு வளம் பெறட்டும்

பூவைப் போல மென்மையான
புதுமை மிக மாணவர்களே
அறிவு மிக மாணவர்களே

கல்வி எனும் மகுடத்தினில்
கண்ணும் கருத்துமாய்
வாழ்வினில் எளிமையுடன்
வாழ்ந்து காட்டுங்கள்

மென்மையான பூவில் வரும்
வெண்மையான நீர் துளி போல்
உங்களால் ஆசான் வாழ்வு
நன்கு செழிக்கட்டும்



**A.FATHIMA ASLA**
NAITHAL NAGAR

# பெண்மையைப் போற்றுவோம்

உலகும் உலகில் உயர்ந்தவள் அவளே
உன்னதப் பிறவி உயிரின் வேரவள்
பேதை என்றே போதை கொண்டு
பெண்மையின் உரிமையை பெட்டியில்
அடைத்தோம்



அடுப்படி உனதே படிப்பது எதற்கென
அன்றொரு காலம் அடிமை வாழ்க்கை
பருவ மொட்டு மலரும் முன்பே
பாலகத் திருமணம்
பாவையைச் சிதைத்தது

புதுமை கண்டு புத்தொளி பெற்றாள்
புலரும் பூமியில் மடமையை வென்றாள்
ஆண்மையைக் காட்டிலும்
சிறந்தவள் என்று
ஆளுமை நிறைந்த அகலாக எரிவாள்

குருதியில் படைத்து உடலைக் கொடுத்தாள்
பெருமையை உணர்ந்து பெண்மையைப்
போற்றுவோம்...



**தெட்சணாமூர்த்தி கரிதரன்**
(சம்பூர் சமரன்),
திருகோணமலை.

பெண்ணினத்தைப் போற்றும்
பெண்ணே நீ
பெயரெடுத்தாய் இம்மண்ணில்
தாயாய்
கற்பனை உலகை கருவாற் காட்டு நீ
கருணைக் கனியை ஈன்றெடுத்தாய்
உன் செயல் சொல்ல
ஓர் உள்ளம் போதாது

ஆலமரம் போல் கிளைவிடும் நீ
அடக்குமுறையில் வாழலாகாது
அன்புக்கும் பண்புக்கும் தலைகுனிந்து
அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும்
தலைநிமிர்த்தி பெண்ணின்
பெருமையை நீ காட்டு

புன்னகை பூத்திட்ட உன் அழகில்
பூரிக்கும் உன் குழந்தை
வற்றிய குளமாக நீயிருந்தால்
அது வரட்சியில் வாடும் பயிராகுமடி
எட்டி நடை போடு எதிர்காலத்திற்காய்

துணிவோடு நடைபோடு
தோழமை வேண்டுமா உனக்கு?
துணிவு கொண்டு நீ எழு
வீட்டைக் காக்கும் பெண்ணே நீ
வீறுநடை போட்டு உன் நாட்டிற்காய்



**சாலையூர் பொன்னந்தி**
சம்பூர்

விளை நிலங்களையெல்லாம் வீட்டு
மனைகளாக்கிவிட்டோம்!
உணவிற்கு உண்டான ஆதாரத்தை அடியோடு அழித்து
விட்டோம்!
உழவனையும் செய்த விவசாயத்தையும் பண்முகத்
திட்டங்களால் சுவடின்றி புதைத்து விட்டோம்!
நாம் உண்ணும் உணவு பூமியில் தான் விளைகிறதா?
உணவைத் தருபவன் உழவன் தானா? என வரும்
தலைமுறை ஆராய்ச்சி செய்ய வழி வகுத்துவிட்டோம்!
நம் இரைப்பையில் இயற்கை உணவுகள் சுமந்த
காலங்கள் அழிந்து உலோகக் கலவைகளைச் சுமந்து
திரிகிறோம்!
இனி வெறும் வாயில் அரிசி கூட மெல்ல முடியாது!
பிணத்திற்கு கூட இனி வாய்க்கரிசி கிடையாது!
உழவனை அழித்தோம் நாம்! ஒருவர் பின் ஒருவராய்
புதைக்கப்படுகிறோம்! விளை நிலங்களில்!

# விளை (நிலங்கள்) மனைகள்.



**MN MOHAMED NIHAN,**
AL - ZIFA SCHOOL ROAD,
ALLAI NAGER, THOPPUR




**MUTUR JMI**

# மூதூர் கரையோர மக்களின் அபிலாசை நிறைவேறுமா...?

மூதூர் கரையோர பகுதியை இணைக்கும் பிரதான வீதியே மூதூர் புதிய துறைமுக வீதி *(New Jetty Road)*. மூதூர் கடல் மார்க்கமாக போக்குவரத்து தொடர்ந்த காலப் பகுதியில் செழிப்புடனும், அதீத பாவனையுடனும் காணப்பட்ட இவ்வீதி திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதி ஊடான போக்குவரத்து திறந்துவிடப்பட்ட பின்னர் தற்போது பாராமுகமற்ற நிலையில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மூதூரின் பிரதான பொருளாதார மூலதனமாக காணப்படும் மீன்படி மற்றும் விவசாயத்தில் மீன்பிடி ஒட்டு மொத்தமாக 40% க்கு அதிக மான அளவு பங்குபற்றுதலை எடுத்துக் கொள்கின்றது. அத்துடன் கருவாடு உற்பத்தி, மீன் ஏற்றுமதி மற்றும் ஏனைய கடல்சார் உற்பத்திகளை இடமாற்றம் செய்ய குறித்த பிரதான வீதி மட்டுமே பயன்பாட்டில் இதுவரை இருந்துவருகின்றது..

பஹ்ரியா நகர், தக்வா நகர் என்ற இரண்டு பிரதான கிராம சேவகர் பிரிவு மக்கள் பயன்படுத்தும் ஒரே சாலையாக இது காணப்படுவதோடு பாடசாலை மாணவர்கள், உயர்தர கல்வியை கற்கும் மாணவர்கள், அரச ஊழியர்கள், மீனவர்கள், மீன்பிடி தொழிலாளிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் கடற்கரை பொழுது போக்கு பூங்கா செல்லும் உள்ளூர் வாசிகள் என்று குறித்த பல்தரப்பட்ட மக்களின் பாவனைக்கு இவ்வீதி பிரதான போக்குவரத்து சாலையாக உபயோகம் செய்யப்படுகின்றது..

**கடந்த 15 வருடங்கள் மேலாகியும் இற்றைவரை நிரந்தர தீர்வை அளிக்க முடியாத நிலையில் காணப்படும் புதிய துறைமுக வீதியின் நிலை கவலைக்குரியதாகும்.**

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தத்தில் மீள் திருத்தம் செய்யப்பட்டு உமிரி ஆற்றை கடக்கும் 60 மீட்டர் நீளமான சுருங்கை (போக்) இணைப்பு கடந்த 15 வருடங்கள் மேலாகியும் இற்றைவரை நிரந்தர தீர்வை அளிக்க முடியாமல் தற்காலிக மாற்றங்களை மட்டுமே நடைமுறைப் படுத்தி போக்குவரத்து பாவனைக்கு செப்பனிடப்பட்ட நிலைபாட்டையே இதுவரை காணக் கிடைத்துள்ளது.

இந்த அடிப்படையில் இரண்டு சுருங்கைகளும் உள்ளார்ந்த ரீதியில் பாவனைக்கு ஆபத்தான நிலையில் காணப்பட்ட தருணத்தில் கடந்த இரு வாரங்கள் முன்பாக பகுதியளவு மீதமாகவுள்ள நிலையில் உடைவுற்று வீதிப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளமை குறித்து பொது மக்கள் **"முத்திதழ்"** குழுமத்திற்கு எடுத்துரைத்துள்ளனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள், மீன், கருவாடு, மீன்பிடி உபகரணங்கள், எரிபொருட்கள், ஐஸ் கட்டிகள் ஏற்றும் வாகனங்கள் குறித்த வீதியை முற்றுமுழுதாக பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. மேற் படி பிரச்சினைக்கு தற்காலிக மாற்ற மாக தாருல் ஜன்னா பாடசாலை அருகில் காணப்படும் இணைப்பு போக்கை குறித்த பிரதேச மக்கள் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். ஆனாலும் அந்த சுருங்கை பாலமும் மிக நீண்ட காலமாக சேதமுற்று அவ்வப் போது களிமண், கிரவல் மண் கொண்டு செப்பனிடப்பட்டு வந்துள்ளது.



மூதூர் கரையோர மக்களின் மிக நீண்டகால பிரச்சினையாக காணப்படும் மேற்படி குறைப்பாட்டுக்கு நிறைந்த தீர்வாக நிலையான பாலம் அல்லது புதிய சுருங்கை அமைப்புகளை மீள் இணைப்பு செய்து வீதியை **பூரண செப்பனிட்டு கொடுக்க எமது ஊர் அரசியல்வாதிகள், பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்விடயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென பொதுமக்கள் சார்பில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.**

**தேடல் தொடரும்....**

**இவ்வாறான சமூகப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதில் எதிர்காலத்தில் முத்திதழ் குழுமம் கவனம் செலுத்தும்.!**

# வழக்கொழிந்தவை



Asmy.ACM

**பனை உணவுகள் : சுமார் ஒரு 15 வருடங்கள் முன்னாடியெல்லாம் ஊரில் எங்கு பார்த்தாலும் பனை மரம் ஓங்கி வளர்ந்தது மட்டுமன்றி கூட்டம் கூட்டமாகவும் காணப்படும்.**

அந்த நாளையில் பனையில் இருந்து பெறப்படும் உணவுகள் அந்த குறித்த சீசனில் எல்லோர் வீட்டிலும் உணவாக உண்ணப்படும். காரணம் இப்போது காண்பது போல பாஸ்பூட், பெக்கிங் பூட்டோ அவ்வளவாக காணப்படவில்லை. ஆதலால் சூழலில் அல்லது கிராமத்தில் கிடைக்கப்பெறும் உணவு பொருட்களை கொண்டுதான் அன்றைய காலை சாப்பாடு தயாரிக்கப்படும். அதிலும் நேற்றைய பழைய சோறு, கறி என்பனவும் சிலர் வீட்டில் விசேஷமாக பகிரப்படுவது வழமை.

**பனை உணவு வகை :**


பனையில் இருந்து பெறப்படும் உணவுகள் ஏராளம். அதில் பனம்பழம், நுங்கு, பனம் கிழங்கு, பனம் குருத்து, ஒடியல், முளைத்த வித்தை வெட்டி உள்ளீடு சாப்பிடுதல், பனம் பழத்தின் பாணியில் (சாறு) இல் இருந்து கரைத்த ஜூஸ், பனம் சோறு கரைத்தல் போன்ற உணவுகளையும் பெறமுடியும்.

இவற்றுக்கு மேலாக பனம் பழத்தின் சாற்றில் இருந்து கருப்பெட்டி (சக்கரை), கற்கண்டு, பனாட்டு, பனங்காய் பணியம் என்பனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றில் முக்கிய சிலவற்றைப் பற்றி சற்று பார்ப்போம்.



- **பனம்பழம் :**

நல்ல சத்துமிக்க இயற்கை உணவு. குறிப்பாக பழம் பழுத்ததும் இயற்கையாகவே மரத்தில் இருந்து விழும். அதனை எடுத்து சாற்றை சாப்பிட முடியும். சிலர் இதனை நெருப்பில் வைத்து அதன் பசை தன்மை வெளியேற்றிய பின்னர் சாப்பிடுவார்கள். இவ்வாறு பெறப்படும் சாற்றை கொண்டு தான் பனங்காய் பணியம், பனாட்டு, கருப்பட்டி, மற்றும் பல உணவுகள் தயாரிக்கப்படுகின்றது.



- **நுங்கு :**

பனம் பழத்தின் இளம் காய் பருவம். வித்துக்கள் முதிர்ச்சி அடையாத நிலையில் வித்து உள்ளீட்டை தான் நுங்கு என்று கூறுவார்கள். சுவையா சாறு மற்றும் இளம் நிலை வித்து உள்ளீடு (வழுக்கள்) உணவாக எடுக்கப்படும். குறித்த காலங்களில் நுங்கு வெட்டி உண்பதற்காக இளைஞர்கள் கூட்டமாக பயணங்கள் மேற்கொள்வது இன்றளவும் ஊரில் வழக்கமாக இருந்து வருகின்றது.

- **பனம் கிழங்கு :**



பழுத்த பனம்பழத்தில் இருந்து பெறப்படும் பனை வித்துக்கள் நாற்று மேடை அமைத்து முளைக்க விடப்படும். இதன்போது முளைக்கும் வித்துக்களின் வேர் பனங்கிழங்காக பெறப்படும். இதனை அவித்து உணவாக உண்பார்கள். இவற்றுக்கு மேலாக பனங்கிழங்கு மிகவும் போசணை மிக்க ஒரு கிழக்கு என்பதற்கு அப்பால் அதற்கென தனித்துவமான சுவையை கொண்டது.



- **ஒடியல் :**

பனங்கிழங்கில் இருந்து உற்பத்தி செய்யப்படும் காயவைத்து பதப்படுத்தப் பட்ட உணவே ஒடியல். மிகவும் நீண்ட காலம் பழுதுபடாமல் தன் இயல்பு நிலையில் காணப்படுவதனால் இதனை அரைத்து மா உற்பத்தி செய்வார்கள். ஒடியல் மிகவும் சுவையான ஒரு உணவுப்பதார்த்தம். உடலிற்கு நல்ல ஆரோக்கியமான கனியுப்புக்களை கொண்டுள்ளது. அத்தோடு சிறு கீறல்களாகவும் கீலங்கலாகவும் நறுக்கி உலரவைத்து பொதிசெய்து நமது நாட்டில் இருந்து வெளிநாடுகளிற்கு ஏற்றுமதி கூட தற்காலங்களில் மேற்கொள்கின்றார்கள்.



- **பனம்சோறு / பால்சோறு :**

பனம்பழ சாற்றை பெற்று அதனை சோற்றில் கரைத்து பனம் சோறு என்று சாப்படிவார்கள். மிகவும் சுவையான உணவில் இதுவும் ஒன்றாகும். அதிக நார்சத்து உள்ளடக்கம் கொண்ட உணவு என்பதனால் உடல் ஆரோக்கியத்திற்கு வலுவூட்டும். அத்தோடு கிழக்குமாகான முஸ்லிம்கள் நோன்பு காலங்களில் அதிகாலையில் உண்ணும் உணவாக பனம் சோறு கரைத்து உண்பது ஒரு பாரம்பரிய வழக்காக இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றது.



- **பனங்காய் பணியம் :**

பழுத்த பனம்பழத்தை எடுத்து அதனை நெருப்பு வெப்பத்தில் குறிப்பிட்ட நேரம் பேணுதல். இதன் நோக்கம் பனம்பழத்தில் இருக்கின்ற கசர் (கசப்பு தன்மை கொண்ட பால்) வெளியாகுவதற்கு. இவ்வாறு மேற்கொண்ட பின்னர் பழத்தில் இருந்து சாரை வேறுபிரித்து எடுத்தல். அதை வடிகட்டி அதில் காணப்படும் தும்பை பிரித்து தூய சாற்றை எடுத்தல்.



**A.M. Ramzan** HND In Computing
Director of NGT Lanka.

# SECURITY AWARENESS

## OF SMART PHONE USERS

**நீங்கள் வெற்றியாளர் என்ன வரும் பதிவுகளை கிளிக் செய்ய வேண்டாம் அதில் உள்ள உண்மைத்தன்மை என்ன? !!!**

உங்களுடைய தொலைபேசிக்கு யாராவது ஒரு நபர் மூலம் ஒரு லிங்கினை அனுப்பி இந்த லிங்கை கிளிக் செய்து நீங்களும் வெற்றியாளர்களாக மாறுங்கள் என வரும் லிங்கினை கொஞ்சம் அவதானியுங்கள். அந்த லிங்கில் கேட்கப்படும் கேள்விகள் உங்களுடைய பெயர் தொலைபேசி இலக்கம் முகவரி இதைப்போல பல தகவல்களை அவர்கள் கேட்பார்கள். அதன்பின் இந்த லிங்க் இனி 10 குழுவிற்கு ஷேர் செய்யவும் என கேட்டுக் கொள்வார்கள். அதே ஷேர் செய்வது மூலம் பெண்களுக்கு தொலைபேசி அல்லது ஏதோ ஒரு பொருளை நீங்கள் இலவசமாக பெற்றுக் கொண்டு இருக்கிறீர்கள் என தெரிவிப்பார்கள். அது எல்லாம் உங்களுடைய தகவல்களை சேகரிப்பதற்காக வேண்டி அவர்கள் செய்யும் ஒரு முயற்சி.




கேள்வி. இந்த தகவல்களை எடுத்து அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

விடை : உங்களுடைய தகவல்களை அவர்கள் சேகரித்து உங்களது தொலைபேசிக்கு அவர்கள் எஸ்எம்எஸ் மூலம் சில விளம்பரங்களை அனுப்புவார்கள். அதன் மூலம் அவர்கள் படங்களை சம்பாதித்துக் கொண்டிருப்பார்கள். நமது தொலைபேசிக்கு ஒவ்வொரு முறையும் தேவை இல்லாத சில வியாபார தொழில் சம்மந்தமான விளம்பரங்கள் வரும்.

நம்மிடம் இருந்து சேகரித்த தகவல்களை அவர்கள் நமக்கு என்ன அவசியம் என தெரிந்து கொண்டு அவர்கள் அந்த அந்த வியாபார நிலையங்களுக்கு நமது தொலைபேசி இலக்கம் மற்றும் பெயர் முகவரி அனைத்தையும் அவர்களுக்கு விற்பனை செய்வார்கள்.

**N.M. Rawshan**
*NDCT (Civil),*
*Periya Palam, Mutur.*



இச்சங்கமானது முதல் முதலாக 2007.07.14ஆம் திகதி அல்லாஹ்வின் கிருபையால் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரைக்கும் மிகச்சிறப்பாக இயங்கிவருகின்றது. றபீக் சர்றாஜ் (JP), றபீக் நஸீப் (BA), ஜுனைது றிஸ்வான், குத்தூஸ் சக்கீம், K.T.சுஜாவுதீன் ஆகியோர்கள் இணைந்து இச்சமூகத்தில் கல்வி கலாசார பண்பாட்டு மற்றும் வறுமை போன்ற விடயங்களில் தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று எண்ணிய இவர்களால் இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சங்கத்தில் இதுவரை தலைவர்களாக T.முபாரிஸ் மௌலவி, றபீக் சர்றாஜ் (JP) , மன்சூர் முகம்மட் நியாஸ் (ஆசிரியர்), அன்சார் நுஸ்ரி ( அபிவிருத்தி உத்தியோகத்தர்), சமீம் சனீம் ஆகியோர்கள் தலைவர்களாக இருந்து மிகச்சிறப்பாக இதனை இயக்கி வந்தனர்.

இது அத்தனைக்கும் வலுவூட்டுவது ஆலோசனை சபை என்பதனை மறத்தல் ஆகாது ஆலோசகர்களாக அல்-ஹாஜ் J.M. மாஹிர்(அதிபர்), அல்ஹாஜ். H.M. மஃரூன் (சமூக சேவையாளர்), M.S. ஹில்மி (அதிபர்), N.M. ஹிசாம் (அதிபர்), I.M. சஹீம் (மின்சார சபை), அலிஅக்பர் யாசீர் (JP) இருந்து இதனை முறைப்படி வழிப்படுத்துகின்றனர்.

# அல்-முபஷ்ஸிறா

## சமூக அபிவிருத்தி மையம்

தற்போதைய நிருவாக சபையில் தலைவராக றபீக் சர்றாஜ் (JP) அவர்களும் செயலாளராக ஹக்கீம் அக்தார் அவர்களும், பொருளாளராக அஜீத் இஜாஸ் அவர்களும் பிரதித் தலைவராக றபீக் நஸீப் (BA) அவர்களும் உப தலைவராக வஹார்த்தீன் சஹீத் அவர்களும், பிரதிச் செயலாளராக றபீக் முபஷ்ஸிர் அவர்களும் பாலர் பாடசாலைக் குழுத் தலைவராக அஜீஸ் றஜீஸ் அவர்களும் இணைப்பாளராக றபீக் ஹில்மி அவர்களும் நிருவாக உறுப்பினர்களாக பக்கீர் புர்க்கான் (BA), தௌபீக் முசௌபீக்(BA), ஐயுப்கான் சஹித் கான், சியாம் மஜீட், முஹாஜிதீன் நிகான், அரபாத், ஐ.இல்ஹாம், பர்சான், கபூர் சன்பர், தாவுது ஆசிக் (BA), அமீர் நிபான் (BA) அவர்களும் இருந்து வருகின்றனர்.

இச்சங்கத்தினை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்றதில் அமீர் சிபான் (JP), ஆர்.எம்.அமீன் , W. அக்ரம், வஹார்தீன் சிபான், மசூத் இவர்களையும் சாரும். எஸ். றொசான், அப்துல் சமட் றஸ்மி, முகம்மட் நிஹால், ஜின்னாஹ் மௌலவி இவர்களையும் சாரும் பொதுவாக எங்களது சேவைகளில் மிகவும் முக்கியமானது பாலர் பாடசாலையாகும். இந்த பாலர் பாடசாலை கடந்த 2015ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் சிறந்த பாலர் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மூதூரில் உள்ள ஒரே ஒரு பாலர் பாடசாலையாகும்.

### எமது சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள்

01. கொடுத்துதவும் நூலகம்
02. வாசிப்பு நூலகம்
03. பாலர் பாடசாலை
04. சிரமதானம்
05. ஜனாஸா வீடுகளுக்கு உணவு வழங்குதல்
06. நோன்பு நோன்பதற்கான ஏற்பாடுகள்
07. நோன்பு திறப்பதற்கான ஏற்பாடுகள்
08. இலவச அப்பியாச கொப்பிகள் விநியோகம்.
09. மாணவர்களுக்கான இலவச பரீட்சைகள்
10. மாணவர்களுக்கான வழிகாட்டல்
11. குளிரூட்டி திருத்துதல் பயிற்சி
12. தொலைபேசி திருத்துதல் பயிற்சி
13. சிரமப்படுகின்ற குடும்பங்களுக்கான பொதிகள் வழங்கல்.
14. இரத்ததான நிகழ்வு
15. சிறுவர் சந்தை







*எல்லாவற்றையும் குறிப்பிட முடியாததனால் சிலவற்றை இங்கு தந்துள்ளோம். இச்சேவைகள் அனைத்துக்கும் உரியவர்கள், இதற்காக உதவி புரிந்த எமது சமூக சிந்தனையுள்ள கொடையாளிகளே.*

இவ்வாறான உங்களது சமூக நிறுவனங்களின் பணிகளை பிரசுரிக்க விரும்பினால் எம்மைத் தொடர்புகொள்ளுங்கள்.
075 2666 166




# மூதூர் மத்திய கல்லூரி

## வரலாற்றுச் சுருக்கப் பார்வை



**Mr. KMM. Baasir (Rafa)**
B.A, PGDE, SLTS
Asst. Principal Kinniya Central College.

திருகோணமலை மாவட்டம் கொட்டியாரக் குடாவின் கரையோரத்தில் அமைந்துள்ள இயற்கை வனப்பு மிக்க கிராமம் மூதூர் ஆகும். இந்த ஊரின் வரலாற்றுச் சிறப்பும் கலாசார பெருமையும் என்றும் போற்றுதற்குரியது. அந்தவகையில் மூதூரின் கல்வி வளர்ச்சியில் நூற்றாண்டு காலச் சேவையாற்றிய கல்வி நிறுவனமாக தி/மூ/மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அமைகிறது.

இருபதாம் நூற்றாண்டின் முன் காலப் பகுதியில் திண்ணைப் பாடசாலையாக விளங்கிய இக்கல்லூரியின் முதல் ஆசிரியராகவும் தலைமை அதிபராகவும் ஜீ. ஏ. ரோஜ் டி வாஸ் விளங்கினார். 1922.05.01.ஆந் திகதி அப்போதைய போர்த்துக்கேயரின் கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது.

மூதூரின் கல்வி கலாசார சமூக விடயங்களில் அதிக அக்கறையோடு செயற்பட்ட மூதூர்பெரிய பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையினால் அப்போது இப்பாட சாலை நிர்வகிக்கப்பட்டது. அதன்பின்னர் 1932 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

அப்போதைய பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் ஆங்கில மொழி மூலமான கற்றல்-கற்பித்தல் மத்திய நிலையமாக எமது பாடசாலை விளங்கியது இதன் பயனாக ஆங்கில மொழித் தேர்ச்சி பெற்ற பல்வேறு ஆளுமைகளை எமது கல்லூரி உருவாக்கியுள்ளது என்றே கூறவேண்டும் அதன்பின்னர் 1935ஆம் ஆண்டு அரசாங்கத்தின் ஜீவன பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு தனது பணியை சிறப்பாக இப்பாடசாலை தொடர்ந்தது.

1946 ஆம் ஆண்டு மூதூர் முஸ்லிம் வித்தியாலயமாகவும், சிரேஷ்ட பாடசாலையாகும் தரமுயர்த்தப்பட்டு திருகோணமலை மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் பாடசாலையாக தனது புகழை உயர்த்திக் கொண்டது. தமிழ் ஆங்கில மொழி மூல பாடசாலைகளில் இருந்தது அதேவேளை 1935 ஆம் ஆண்டில் சிங்களமொழி மூலமாகவும் கற்பிக்கப்படுகின்றன பாடசாலையாகவும் இது விளங்கியது. காலப் பகுதியில் இந்தியாவிலிருந்து வந்த எச்.பீ. ஐசேக் என்பவர் அதிபராகக் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1954.01.09 முதல் 1959.06.30 வரையான காலப்பகுதியில் டீ.ஜீ. சோமசுந்தரம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். அதன் பின்னர் 1959.07.01ஆந் திகதி முதல் 1964.04.30ஆந் திகதி காலப்பகுதியில் ஊரைச் சேர்ந்த எம் எம் கே என்றழைக்கப்படும் கச்சு முகம்மது அவர்கள் அதிபர் கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலப்பகுதியில் எமது பாடசாலையானது மூதூரின் விஞ்ஞான கல்வியின் தேவையை கருத்திற்கொண்டு 1961 கல்வி அமைச்சராக இருந்த பதுவுத்தீன் அவர்களினால் விஞ்ஞான கூடம் நிர்மாணிக்கப்பட்டு, விஞ்ஞானத்துறை அபிவிருத்தி செய்யப்பட்டது. இக்காலமே கல்லூரியின் பொற்காலம் எனக் கருதப்பட்டது.



1965ஆம் ஆண்டு இக் கல்லூரியில் க. பொ. த. (உயர் தர) கலைப் பிரிவு ஆரம் பிக்கப் பட்டு இதன்மூலம் மூதூரில் கலைப் பட்டதாரிகள் உரு வாக்கப்பட்டதோடு பல்கலைக்கழகத் திற்கு அதிக மான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதன் பின் 1967 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வர்த்தக மற்றும் விஞ்ஞான பிரிவுகள் உருவாக் கப்பட்டது. அதன் பின்னர் பல இனங் களைச் சேர்ந்தவர் கள் ஒற்றுமை யுடன் இங்கு கல்வியை கற்றனர். 1982.9.16 ஆம் திகதியி லிருந்து இக்கல்லூரியின் வளர்ச்சியின் விளைவாக இப் பாடசாலை மத்திய மகா வித்தியாலயமாக அரசாங்கத்தினால் தரமுயர்த்தப்பட்டது.

அதன்பின்னர் மூதூர் கோட்டத்திலுள்ள பாடசாலைகளை




இணைத்து அப்பாடசாலைக்குத் தலைமை தாங்கும் பாரிய பொறுப்பினைக் கொண்ட கொத்தணிப் பாடசாலையாக 1987 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டு இதன் அதிபராக எம். பரித் அவர்கள் நியமிக் கப்பட்டார்கள்.

இதன் பின் வளர்ச்சிப் படியில் மற்றுமொரு மைல்கல்லாக 1994 ஜூலை 26ஆம் திகதி மத்திய அரசினால் மூதூர் மத்திய கல்லூரியில் தரம் உயர்த்தப் பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். மேலும் ஒவ்வொரு தொகுதிக் கும் ஒரு தேசிய பாட சாலை திட்டத்தின் கீழ் 1995.07.13ஆம் திகதி தி/ மூ/மத்திய கல்லூரி தேசிய பாடசாலையா கத் தரமுயர்த்தப்பட் டது. அதன் பின்னர் 2013 இல் உருவாக்கப் பட்ட தொழில்நுட்ப கற்கைப் பிரிவின் மூல மாக 1AB(S) எனவும் தரமுயர்த்தப்பட்டது.

தற்போதைய **அதிபர் ஏ.எச்.எம். பஸீர்** அவர் கள் 2013.01.09 ஆம் திகதி அதிபராக பதவியேற்ற வுடன் பல்வேறு துறைகளிலும் எமது பாடசாலை செழித்தோங்கத் தொடங் கியது குறிப்பாக 1000 பாட சாலை அபிவிருத்தி செய்யும் கல்விய மைச்சின் திட்டத்திற்கமைய எமது பாடசாலையும் உள்வாங்கப் பட்ட நிலையில் உயர் தரப் பிரிவுகளில் தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத் தியது. புதிய மஹிந் தோதய தொழில் நுட்ப கூடம் பல பிரிவுகளைக் கொண்டதாக ஆய்வுக் கூடங் கள் ஆரம்பிக்கப்பட்டன.

- மஹிந்தோதய தொழில்நுட்ப கூடத்தின் கட்டடம் 2014.5.31ஆம் திகதி திறந்துவைக்கப் பட்டது.
- புதிய தொழில்நுட்ப மூன்று மாடிக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சியில் மேற்கொள்ளப் பட்டது.
- வாப்பு மரைக்காயர் மண்டபம் பழைய விவசாய கோழிப் பண்ணை கூடம் மரவேலை கட்ட டங்கள் 2015.5.30 ஆம் திகதி அகற்றப் பட்டு தொழில்நுட்ப ஆய்வுகூடம் கட்டுவதற்கான வேலைகள் முன் னெடுக்கப்பட்டன.
- 2015.12.27 நடுவே காணிக்கான அடையாளப்படுத்தப்பட்டு திட்ட படம் வரையப்பட்டது World Vision.
- 2016.03.11 ஆம் திகதி புதிய மூன்று மாடிக் கட்டடத்தில் வாப்பு மரைக்காயர் மண்டபம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ஐந்து வருட பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் வரையப்பட்டது.
- 2016.5.18 புதிய மஸ்ஜித் அமைக்கப் பட்டது.
- 2016.8.18 மடுவ காணி செப்பனிடப்பட்டு மாணவர் விடுதி அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- மூதூர் பூங்கா அருகே ஆசிரியர் வள நிலையம் மாண வர் விடுதி கட்டிட பகுதிக்கு **ஜமால்தீன் சதுக்கம்** என பெயர் சூட்டப்பட்டு 2018.9.25 ஆம் திகதி கல்நாட் டப்பட்டது.
- 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் தேசிய உற்பத் தித்திறன் போட்டிகளில் பங்கேற்பதற்காக பாட சாலை அழகுபடுத்தப்பட்டதோடு, நிர்வாகம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.
- உயர்தர, சாதாரண தரப் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டன
- மாணவர் விடுதிக் கட்டிடம் 2019.9.9 ஆம் திகதி காலை 10 மணி அளவில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவர்களின் பங்கு பெற்றுதலோடு திறந்து வைக்கப்பட்டு மாணவர்க ளிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாறான பல்வேறு வளர்ச்சிப் படிகளையும் தன்ன கத்தே கொண்டு மூதூரின் கல்வி வளர்ச்சியில் முன்னணி வகிக்கும் எமது கல்லூரி கல்வியில் மட்டு மின்றி கலாச்சாரம் விளையாட்டு செயற்பாடுகளில் முன்னணி வகித்த கல்விக் கூடமாக இப்பாடசாலை திகழ்கிறது.

கா.பொ.த (சாதாரண தரம்) மற்றும் (உயர் தர) வகுப்புகளில் கலை வர்த்தகம் உயிரியல் விஞ்ஞானம் கணிதம் தொழில்நுட்பத் துறைகளில் பல நூற்றுக்கணக்கான மாணவர்களை பல்கலைக்கழகம் கல்வியற்கல்லூரி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதற்கான வரலாற்று சாதனைக ளையும் ஏற்படுத்தியுள்ளது.

இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதியி லிருந்து இற்றை வரைக்கும் 33 அதிபர்களை கொண்டு இயங்கிய இக்கல்லூரி சிங்களம் தமிழ் முஸ்லிம் ஆசிரியர்கள் மூவினரும் கற்பித்துள்ளனர். தற்போது கல்லூரி மூதூரின் 1AB(S) வகையைச் சேர்ந்த ஒரேயொரு தேசிய பாடசாலையாக உள்ளதோடு 1180 மாணவர் களும் 57 ஆசிரியர்களும் 07 கல்விசாரா ஊழியர்களையும் கொண்டு தற்போ தைய அதிபரான ஏ.ச்.எம். பசீர் அவர்களின் தலைமையின் கீழ் மிகச் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது.



**அதிபர் ஏ.ச்.எம். பசீர்**

## மூதூர் மத்திய கல்லூரியில் இதுவரை கடமையாற்றிய அதிபர்களின் விபரம்

(1930 தொடக்கம் – தற்போது வரை)

| NO | NAME | LOCATION | PERIOD |
|---|---|---|---|
| 1 | Mr.G.AROCHE DE VAS | MUTHUR | 03.05.1922 - 31.10.1930 |
| 2 | MR.V.GANAMUTHU | MUTHUR | 01.11.1930 - 28.09.1935 |
| 3 | MR.K.S.SITTAMPALAM | BATTICALOA | 29.09.1935 - 31.12.1936 |
| 4 | MR.M.SINNATHAMPY | BATTICALOA | 01.01.1937 - 01.11.1939 |
| 5 | MR.V.ARULAIAH | MUTHUR | 01.12.1939 - 05.12.1940 |
| 6 | MR.S.THANGARASA | BATTICALOA | 06.12.1940 - 31.01.1946 |
| 7 | MR.HENRAY.B.ISSAK | INDIA - KERLA | 01.02.1946 - 31.08.1954 |
| 8 | MR.D.G.SOMASUNDARAM | BETTI - SAMPUR | 01.09.1954 - 30.06.1959 |
| 9 | MR.M.M.K.MOHAMED | MUTHUR | 01.07.1959 - 30.04.1964 |
| 10 | MR.U.Z.UMARDEEN | MATALA | 01.05.1964 - 06.06.1965 |
| 11 | MR.M.M.K.MOHAMED | MUTHUR | 07.06.1965 - 31.12.1974 |
| 12 | MR.A.J.M.JAMEEL | MUTHUR | 01.01.1975 - 28.02.1975 |
| 13 | MR.A.H.MAHROOF | JAFFNA | 01.03.1975 - 25.08.1975 |
| 14 | MR.M.M.SATHAK | MUTHUR | 26.08.1975 - 07.11.1976 |
| 15 | MR.S.M.M.FALEEL | MARUTHAMUNAI | 08.11.1976 - 11.08.1977 |
| 16 | MR.S.M.A.HUTHA | MUTHUR | 12.08.1977 - 14.08.1977 |
| 17 | MR.A.C.K.MOHAMED | MUTHUR | 15.08.1977 - 28.02.1978 |
| 18 | MR.J.M.JAN | TRINCOMALEE | 01.03.1978 - 01.05.1979 |
| 19 | MR.M.L.SINNA LEBBAI | KATTANKUTY | 02.05.1979 - 26.03.1980 |
| 20 | MR.M.S.M.JUNAID | MUTHUR | 27.03.1980 - 25.01.1987 |
| 21 | MR.A.M.BUHARY | MUTHUR | 26.01.1987 - 01.03.1988 |
| 22 | MR.M.A.FAREED | MUTHUR | 02.03.1988 - 31.12.1992 |
| 23 | MR.A.M.BUHARY | MUTHUR | 01.01.1993 - 03.12.1996 |
| 24 | MR.P.JAMALDEEN | MUTHUR | 04.12.1996 - 06.07.1997 |
| 25 | MR.M.M.ISHAK | MUTHUR | 07.07.1997 - 12.12.1999 |
| 26 | MR.N.M.NAJIMUDEEN | MUTHUR | 13.12.1999 - 24.06.2001 |
| 27 | MR.A.MOHAIDEEN | MUTHUR | 25.06.2001 - 08.11.2003 |
| 28 | MR.N.M.NAJIMUDEEN | MUTHUR | 09.11.2003 - 08.10.2004 |
| 29 | MR.A.NAJIMUDEEN | MUTHUR | 29.10.2004 - 19.07.2011 |
| 30 | MR.M.M.M.SATHIK | MUTHUR | 20.07.2011 - 09.01.2012 |
| 31 | MR.A.S.IZZATHEEN | ERAVUR | 10.01.2012 - 30.11.2012 |
| 32 | MR.A.S.MAHROOF | KINNIYA | 01.12.2012 - 04.09.2013 |
| 33 | MR.A.H.M.BASEER | MUTHUR | 15.09.2013 - UP TO NOW |

## கடந்த 05 வருடங்களில் மூதூர் மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விபரம்

(2015 தொடக்கம் – 2020 வரை)

| YEAR | STREAM | STUDENTS | TOTAL |
|---|---|---|---|
| 2015 | BIOLOGICAL SCIENCE | 01 | 23 |
| | PHSICAL SCIENCE | 01 | |
| | BIO SYSTEM TECHNOLOGY | 07 | |
| | ENGINEERING TECHNOLOGY | 03 | |
| | COMMERCE | 03 | |
| | ARTS | 08 | |
| 2016 | PHSICAL SCIENCE | 01 | 25 |
| | BIO SYSTEM TECHNOLOGY | 12 | |
| | ENGINEERING TECHNOLOGY | 03 | |
| | COMMERCE | 04 | |
| | ARTS | 05 | |
| 2017 | BIOLOGICAL SCIENCE | 01 | 21 |
| | PHSICAL SCIENCE | 02 | |
| | ENGINEERING TECHNOLOGY | 06 | |
| | BIO SYSTEM TECHNOLOGY | 08 | |
| | COMMERCE | 03 | |
| | ARTS | 01 | |
| 2018 | BIOLOGICAL SCIENCE | 01 | 28 |
| | PHSICAL SCIENCE | 07 | |
| | ENGINEERING TECHNOLOGY | 04 | |
| | BIO SYSTEM TECHNOLOGY | 09 | |
| | COMMERCE | 02 | |
| | ARTS | 05 | |
| 2019/2020 | BIOLOGICAL SCIENCE | 01 | 24 |
| | PHSICAL SCIENCE | 06 | |
| | COMMERCE | 01 | |
| | ARTS | 08 | |
| | ENGINEERING TECHNOLOGY | 04 | |
| | BIO SYSTEM TECHNOLOGY | 04 | |

## பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு - 2021



எமது பழைய மாணவர் சங்கபொதுக் கூட்டமும்,புதிய நிருவாகத் தெரிவும் கல்லூரி முதல்வர் அல்ஹாஜ்.ஏ.எச்.எம்.பஷீர் அவர்கள் தலைமையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இன்று (13) ஞாயிற்றுக் கிழமை மாலை 4:30 மணி தொடக்கம் 6:00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

இதன் போது கடந்த நிருவாகத்தின் செயற்பாடுகள்,பாடசாலை வரலாற்று நூல் வெளியீடு மற்றும் கல்லூரியின் நூற்றாண்டு விழா தொடர்பில் விளக்கங்களும், கருத்துக்களும் தலைவர் மற்றும் செயலாளர் எம்.எம்.நதீம் ஆசிரியர் ஆகியோரினால் வழங்கப்பட்டதோடு பொருளாளர் ஐ.இம்தியாஸ் ஆசிரியரினால் கணக்கறிக்கையும் சமர்பிக்கப்பட்டன.

இறுதியாக இந்நிகழ்வில் புதிய நிருவாகத்திற்காக 15 உறுப்பினர்கள் கலந்து கொண்ட பழைய மாணவர்களினால் தெரிவு செய்யப்பட்டனர்.

அந்த வகையில் OBA 2021 -2022 ஆம் ஆண்டுக்கான புதிய நிருவாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவாகினர்.

MR.AHM.பஷீர் (அதிபர்), MR.A.H.இஹ்திஸாம், MR.KM.நிஹார், MR.MM.ஹுஸைன் பைஸாத், MR.AWM.ஜலீஸ், MR.NM.ரிகாஸ், MR.SM.முஜீத், MR.AS.சஸ்மின், MR.SM.பரீஸ், MR.MHM.றிபாஸ், JM.ஜஸ்றூன், MR.UM.ஜீஸான் MR.FM.சரீக், MR.H.அகீல், MR.AM.ஹைஸான்,

தெரிவு செய்யப்பட்ட புதிய புதிய நிருவாக அங்கத்தவர்களுக்கு எமது பழைய மாணவர்கள் சமூகம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## நூற்றாண்டைநோக்கிய பயணத்தில் மற்றுமொரு மைல்கல்

எமது பாடசாலையின் நூற்றாண்டை நோக்கிய பயணத்தை சிறப்பிக்கும் மற்றுமொரு செயற்றிட்டமாக சூழுடீயு இனால் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலையின் வரலாற்று முக்கியத்துவம், மகிமை தொடர்பான எண்ணப்பாங்கை அதிகரிப்பதோடு, நூற்றாண்டை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வரலாற்று நூல் வெளியீட்டுக்கு நிதி திரட்டும் நோக்கிலும் இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே! மரியாதைக்குரிய பெற்றோர், பாதுகாவலர்களே!



இம்முறை உங்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்காக நமது அப்பியாக் கொப்பிகளை வாங்கி நம் கல்லூரியின் நூற்றாண்டுப் பயணத்தில் நீங்களும் பங்காளியாகுங்கள்.

## வாழ்த்துகின்றோம்




மாவட்டத்தில் சிறந்த ஆண்டறிக்கைக்காக 3 ம் இடம்பெற்ற எமது கல்லூரிக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை டபலே நிறுவனத்துடன் கல்வி அமைச்சு இணைந்து ‘தேசிய மற்றும் மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட சிறந்த ஆண்டறிக்கைக்கான 12வது விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் விருது விழாவில் திருகோணமலை மாவட்டத்தில் எமது மூதூர் மத்திய கல்லூரி (தே/பா) 3ம் இடம்பெற்று விருதினைப் பெற்றுக் கொண்டது

இதற்காக இரவு பகல் பாராது தங்களது அயராத பங்களிப்பை வழங்கி உழைத்த அதிபர் ஏ.எச்பஷீர்,ஆசிரியர் ஜனாப்.உனைஸ் மற்றும் ஆசிரியர் குழாத்துக்கும் #OBA நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

## MCCIAN_BLAST_2K18 Organized by - OBA
### T/MCC - N.S] BEST_PLAYER of the Tournament




எமது பிரம்மாண்ட மென்பந்து கிரிக்கட் சமர் மிகச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நிறைவு பெற்றுள்ளது. அந்த வகையில் இத் தொடரில் 19 அணிகள் 1994 முதல் 2014 ம் ஆண்டு வரையான O/L வகுப்பு மாணவர்களின் அணிகள் விளையாடியிருந்தார்கள்.




இத் தொடரின் சிறந்த வீரராக சகல துறைகளிலும் சிறந்த திறமையை வெளிப்படுத்திய Team 94 (2010) O/L வகுப்பு அணியின் வேகப் பந்து வீச்சாளரும், சகலதுறை வீரருமான மாஸ்டர். N. இப்ஹாம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு OBA பழைய மாணவர்கள் சமூகம் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மாற்றுத் திறனாளி மாணவர்களைக் கௌரவித்தல்

மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் தி/மூ/மூதூர் மத்திய கல்லூரியின் மாற்றுத் திறனாளி மாணவர்கள் போட்டிகளில் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டி கல்லூரிக்கு நன்மதிப்பை பெற்றுக் கொடுத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 16. 09. 2019 திங்கட்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.

மொத்தமாக 11 இடங்களை பெற்று பெருமை சேர்த்த எமது மாணவச் செல்வங்கள் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுள் 04 பேர் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**“எங்களால் முடியும்.நாங்களும் சமூகத்தில் அங்கத்தவர்களே”**

இவர்களின் வெற்றிக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்: M.M.Mahees, ஆசிரியைகள்: Mrs.C.Dayana, Mrs.S.Sakeera ஆகியோருக்கு எங்கள் பாராட்டுக்கள்.






### தன்னிறைவு காணும் தலைமுறை

ஒரு சமுகம் பக்குவ நிலை அடைய - துறை சார் அபிவிருத்தி அடைய வேண்டும் எனில் அடிப்படையாக அமைவது கல்வியே என்பதில் சந்தேகமில்லை.

இன்று நாம் அனைத்துக்கும் / அனைத்து முன் மொழிவுக்கும் விதண்டாவாத கருத்துக்களையும் எதிர்மறை வாதங்களையும் கூற முண்டி அடித்துக் கொண்டு முன் நிற்கிறேன் / றோம்.

நேற்றைய பக்கங்களை புரட்டிப் பார்த்தால் துறைசார் நிபுணர்களுக்கு (கல்விமான்களுக்கு) நாம் குடுத்த மரியாதை / கௌரவம் என்பது வாய்ச் சொல்லாகவே காணப்படுகிறது.

எது எப்படியிருந்தாலும் குறை காணுவதிலும் / தேடுவதிலும் தன்னிறைவு அடைய முயற்சித்துக் கொண்டு இருக்கும் சமுகம் தான் நான்.



**Nishadh Nakeeb**

வேறுபாடுகள் இல்லா மாறுபட்ட உலகை நோக்கி..
மாறுபாடுகள் இல்லா வேறுபட்ட உலகை நோக்கி..

### பந்தா, பகட்டு, படம் காட்டுதல்

“வீண்பெருமையும், கர்வமும் கொண்டவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை”

வீண்பெருமைக்கு மறைத்துக்கொள்ளல் எனும் கருத்துண்டு. சுயத்தை, தன்னிலையை மறைத்தல் எனும் கருத்தாகும்.

வீண் பெருமையை வெளித்தோற்றத்தில், பொருற்களில் காட்ட நினைக்கும் பகட்டுக் காரர்கள். இப்பண்பு அவர்களது நடத்தையில் வெளிப்படும். வீண்பெருமைக்காகவே வாழ்வர். அடுத்தவர்களுக்கு காட்டவேண்டும் என்பதற் காகவே பொருற்கொள்வனவு செய்வர்.

பேச்சில் வேறுபடுத்திக்காட்டும் பகட்டுக்காரர் களைக் குறிக்கும். எதுவும் தன்னாலேயே நடைபெற்றது,
நான்.. நான்.., எங்களது எனப் பிதட்டிக் கொள்வர். ஊர்ப்பெருமை, குலப்பெருமை பேசுவதும் இதில் உள்ளடங்கும்.

பெருமை இருக்குமிடத்துக்கு பொறாமையும் வந்து சேரும்.

"நிச்சயமாக அல்லாஹ் தற்பெருமை கொண்டு கர்வம்கொள்பவர்களை நேசிப்பதில்லை"( சூரா லுக்மான்:18)



**Siraj Hakkeem** (Siraj Ahm)

### RONALDINHO ⚽⚽⚽⚽⚽

வெற்றியாளர்கள் ஒவ்வொருவரினது வெற்றிக்குப் பின்னாலும் ஒரு சோகம் நிறைந்த கண்ணீர் கதை உண்டு...

Ronaldinho சிட்னி ஒலிம்பிக் உதைபந்து தொடரில் சிறந்த வீரருக்காக Golden_Ball விருதும் அதிக கோல் அடித்த வீரருக்காக Golden_Boot விருதும் பெற்ற பின்னர், ஒரு பேட்டியில் இவ்வாறு கூறினார். “நான் உதைப்பந்து பழகிய ஆரம்ப நாட்களில் எனது தந்தை என்னிடம் வெற்றுப் பாதங்களினால் விளையாடி பழகினால்தான் பாதத்திற்கு நல்ல உணர்திறன் கிடைக்கும் பந்தினை எமது பாதங்களின் கட்டுப்பாட்டில் (Close Control) வைத்திருக்க முடியும் என்றார்”. நான் அவருக்கு உறுதியளித்தேன் “நான் அவ்வாறு பந்தினை பாதத்தில் சிறப்பாக கட்டுப்படுத்த பழகுவேன் என்று”...

உண்மையில் என்ன நடந்தது என்றால், ஒரு ஜோடி பாதணி வாங்கித்தர எனது தந்தையிடம் அப்போது பணம் இருக்கவில்லை. முதன்முறையாக நான் Golden Boot விருது பெற்ற போது அந்த சந்தோசமான தருணத்தில் நான் அழவில்லை. ஆனால் அத்தருணத்தில் தந்தை உயிருடன் இல்லை எனும்போது என்னால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை



**Sumail Harees**

Social activist | Book lover | Cricketer | Free lance | Srilanka lover. | Student

அந்திமாலை சிறுமயக்கம்
அந்தப்புர சாம்ராஜ்யத்தின்
இரவுக் கானம்..

மூர்க்கத்தின் வீரியங்கள்
முந்தானையுலகின் பேரமைதி..

மோகனங்களின் இருப்பிடம்
அடர்ந்த கானகத்தின் மெல்லிய
ஒளிக்கீற்று..

அசரவைக்கும் இங்கிதங்கள்
இதமான காற்றின் மாலைப் பேச்சு...

மதிமயக்கும் மகிமைகள்
மகத்தான பண்டிதனின்
வெண்மை எழுதுகோல்...

யாசிப்பின் நேசிப்பு
எழுத்துக்களின் மரியாதை..

யாப்பே..! இங்ஙனம்
ஓர் “ஆன்மத்தின் அசரீரிகள்”



**Mohamed Buharys**
Freelance Journalist

சேனையூர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை சேனையூர் மத்திய கல்லூரி வளாகத்தில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜே.ஜனார்த்தனான் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.இப்போட்டித் தொடரில் ஐந்து அணிகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.




தோப்பூரிலிருந்து பல்கலைகழகம் தெரிவு செய்யப்பட்ட 33 மாணவமாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை அல்ஹம்றா மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்றான் மஹ்ஷூப் கலந்து சிறப்பித்தார்.
(பல்கலை தெரிவாகிய மாணவர்களின் எதிர்காலம் சிறக்க இறைவன் அருள்புரிவானாக!)



## முகநூல் முற்றத்து வெளியில்

**முகநூல் முற்றத்துவெளியில் உங்கள் Facebook ஆக்கங்களும் இடம்பெற விரும்புகின்றீர்களா...?**

**#Muththithal #mmv/fb**

**என்று #(Hastag) செய்யவும்.**



**மேலதிகத் தொடர்புகளுக்கு : Muththithal முத்திதழ் என்ற fb Page ஐ நாடவும்**

facebook

# உதிரப் போக்கு

## – சமூகப் பார்வை



**Sameem Kansul Fazeen**
MSc(R), BTech(Hons)
Iqbal Road.

**மா**தவிடாய்... இன்னும் இதை நேரடியாக பேசத் தயங்கும்.. ஏன் பேசவே கூடாத பேசவே முடியாத சில தலைப்புகளில் முக்கியமான தலைப்பாக கருதும் சமூகத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

மாதவிடாய் நாளில் இருக்கும் ஒரு பெண்ணிடம், என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்க என்று ஒரு ஆண் கேட்டால், இன்னும் உடம்பு சரியில்லை அல்லது தலை வலிக்கிறது என்கிற மறைமுக விளையாட்டையே நாம் ஆண்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறோம். இன்னும் பள்ளிகளிலும், அலுவலகங்களிலும் ஆண் ஆசிரியரிடமோ அல்லது ஆண் சக ஊழியர்களிடமோ ‘எனக்கு இன்னைக்கு *Periods*’- என்று தயங்காமல் சொல்லும் வெளிப்படைத்தன்மை பெண்களுக்கு வந்துவிட்டதாகத் தோன்றவில்லை.

அதைவிடக் கொடுமை, பள்ளிகளிலோ அல்லது அலுவலகங்களிலோ மாதவிடாய் நாள் தொடங்கிவிட்டால் அங்கிருக்கும் ஆண்கள் கண்களில் படாமல் அந்த நாப்கினை எப்படி டாய்லட்டிற்கு எடுத்துச் செல்வது என்று யோசித்தே சோர்ந்து போன அனுபவம் நம்மில் பலருக்கும் உண்டு. அதை ஒரு கவர் அல்லது பேப்பரில் மடித்து, ஆடைக்குள் எங்காவது சொருகிக் கொண்டு, இயல்பாக நடந்து டாய்லட்டிற்கு செல்வதற்குள் பாதி உயிர் போய்விடுகிறது. இதில் யாரவது அதை கவனித்துவிட்டார்களா என்கிற சிறுபிள்ளைத் தனமான பயம் வேறு. ஏன் மாதவிடாய் குறித்த இத்தனை நடைமுறை சிக்கல்கள்?

இதற்கு ஒரு முக்கிய காரணம், நம் ஆண்களுக்கு இன்னும் மாதவிடாய் குறித்த புரிதல் குறைவாகவே இருப்பதாகத் தோன்றுகிறது. இது பெண்களின் அந்தரங்கமான விசயம் எனவே இதிலிருந்து சற்றே விலகியிருத்தல் சாலச் சிறந்தது என்றே ஆண்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். பெண்களுக்கு காய்ச்சல் வந்தாலோ அல்லது சளிப்பிடித்தாலோ அது அவர்களின் அந்தரங்கம் என்று நாம் விலகுவதில்லை. அதுபோலதான் மாதவிடாயும் என்கிற இயல்பான சிந்தனையை வளர்த்துக்கொள்ள வேண்டியக் கட்டாயத்தில் ஆண்கள் இருக்கிறார்கள். அதுவே பெண்களுக்கு இதுப் பற்றிய வெளிப்படைத் தன்மையோடு இருப்பதிலும், உதவி கேட்பதிலும், இருக்கும் நடைமுறைச் சிக்கல்களை ஓரளவேனும் குறைக்கும்.

அதேபோல் பெண்களும், மாதவிடாயைக் குறித்த உரையாடல்களை இந்த சமூகத்தில் சகஜமாக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு செயல்படும் பொழுதுதான் இந்த நடைமுறைச் சிக்கல்கள் அகலும். இன்னும் நம் சமூகத்தில் அம்மாக்கள் தன் மகன்களிடம் இதுகுறித்து பேசுவதைத் தவிர்ப்பது என்பது மிகப்பெரிய அபத்தமாக இருக்கிறது. ஏனென்றால், ஆண்களின் இது போன்ற அடிப்படைக் கற்பிதங்கள் அவர்களின் அம்மாவிடமிருந்தும், வீட்டிலிருந்துமே தொடங்குகின்றன என்பது எனது கருத்து.

இந்த சமூகம் எவ்வாறு பார்க்கிறது? மாதவிடாயைப் பற்றி இந்த சமூகம் தெரிந்து வைத்திருக்கிறதா?...அப்படியே தெரிந்து வைத்திருந்தாலும் அது சரியானதாக இருக்கிறதா??...பார்க்கலாம்...



**மாதவிடாயைப் பற்றி அறிவியலாக சொல்ல வேண்டுமென்றால்** “பெண் களின் அடிவயிற்றில் கருப்பைக்கு இரண்டு பக்கங்களிலும் பக்கத்துக்கு ஒன்றாக சினைப்பைகள் *(Ovary)* இருக்கும்... சினைப்பையில்தான் பெண்கள் கருத்தரிப்பதற்கான கரு முட்டைகள் வளர்கின்றன... இந்தக் கருமுட்டை கருக்குழாய் *(Fallopien tube)* வழியாக கருப்பையை அடையும்...கருமுட்டை ஆணின் விந்தணுவோடு இணைந்தால் கரு உருவாகும்...அந்த கருமுட்டை ஆணின் விந்தணுவோடு சேரவில்லையென்றால் அது உடைந்து பிறப்புறுப்பு வழியாக வெளியேறும்...அங்கே இருக்கக் கூடிய பஞ்சு போன்ற மென்மையான திசுப்படலம் கரு உருவாகாதபோது உடைந்து இரத்தமாக வெளியேறும்... இந்த இரத்தப்போக்கு மாதம் ஒருமுறை 3-5 நாட்கள் வரை நடக்கும்... இதுதான் மாதவிடாய்....

படிப்பறிவில்லாத மக்களுக்கு இதனைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால் ஒரு பெண் குழந்தை பெற்றுக்கொள்ளத் தயாரான பின்பு மாதாமாதம் நடக்கக் கூடிய இரத்தப்போக்குதான் மாதவிடாய்.

மாதவிடாய் நடக்கும் முன்பு இருக்கக் கூடிய நிலை உளவியலாக மிகப்பெரிய சிக்கலைக் கொடுக்கும்...இதனை *premenstrual syndrome* என்பர்... மாதவிடாய் தோன்றுவதற்குமுன் கவலை, பதற்றம், ஆர்வமின்மை, அசதி, கோபம், எரிச்சல், தூக்கமின்மை, பாதுகாப்பற்றதாக உணர்தல், தனிமை விரும்புதல், தான் அழகாக இல்லை என நினைக்கும் பெண்களுக்கும் சமூகத்தால் அங்கீகாரம் கிடைக்காத பெண்களுக்கும் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை, இந்த அனைத்திற்கும் உச்சமாக தற்கொலை எண்ணம் வரை இந்த *premenstrual syndrome* என்று சொல்லக்கூடிய மாதவிடாய்க்கு முந்தைய நிலையில் பெண்களுக்குத் தோன்றும்...பல நேரங்களில் இந்த எண்ணங்கள் மாதவிடாய் தொடங்கி முடியும்வரை இருக்கும்...சில சமயங்களில் பெண்கள் தேவையில்லாமல் அதிகளவு கோபப்படுவதற்கான காரணம் இதுதான்...

மாதவிடாய் சில பெண்களுக்கு பல்வேறு காரணங்களால் மாதாமாதம் ஏற்படாமல் 2,3 மாதத்துக்கு ஒருமுறை 6 மாதத்துக்கு ஒருமுறை என ஏற்படும்...இதனை *Irregular periods* என்பர்...அவ்வாறு ஏற்படும்போது 6 மாதத்திற்கும் சேர்த்து இரத்தப்போக்கு ஒரே சமயத்தில் வெளியேறும். இந்த இரத்தப்போக்கானது தொடர்ந்து 15,20 நாட்கள் வரை இருக்கும். இவ்வாறு Irregular periods சந்திக்கும் பெண்களுக்கு தசைப் பிடிப்பு, மார்பக வலி,மா ர்பக வீக்கம், தலைவலி, தோள்மூட்டு வலி, தண்டுவட வலி, மனச் சோர்வு, எரிச்சல,உடல் அசதி, அடிவயிற்று வலி, வாந்தி, குமட்டல் போன்றவை சொல்ல முடியாத அளவு ஏற்படும்...

இன்று பலரும் பெண்களின் மாதவிடாய் சமயத்தில் ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி இன்றைக்கும் கண்டுகொள்வதே இல்லை.

எல்லாவற்றையும் அறிவியல் பூர்வமாக அணுகக் கற்றுக் கொண்டிருக்கும் இந்த சமூகத்தில், மாதவிடாய் தொடர்பான சிலக் கேலிக் கூத்துகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பது மறுக்க பட முடியாத உண்மை. இனியேனும் இது பெண்கள் பிரச்சனை என்று ஒதுங்கி நிற்காமல் ஆறுதலாக இருக்க முயற்சிப்பது அனைவரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

> **“(நபியே) மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள் நீர் கூறும்: “அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும்.ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள். அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்”**
>
> (அல்-குர்ஆன் 2 : 222)



# “கல்வி மூலம் எதிர்பார்க்கின்ற சிறந்த மானிடத்தை இலங்கையில் நடைமுறையிலுள்ள கல்வி முறைமை வழங்கியுள்ளதா ...?



## – ஒரு தூரநோக்கான பார்வை

தொடர் – 01


**A. S. Mohammed Fousi**
B.A.Hons, M.A,PGDE
Teacher Educator (SLTES)
Lecturer - Uva NCOE Bandarawela.


*(ஆசிரிய வாண்மைத்துவத்தை பரீட்சித்துப் பார்க்கும் நோக்கில் மூதூர் வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடத்தைப் பிடித்த கட்டுரை)*

எண்ணங்களும் ஏடுகளும் வண்ணமயமாய் இல்லாமல் வாழ்க்கைக்கு வழிகாட்டும் உந்து சக்திகளாய் இருக்க வேண்டும் என்பது எல்லோரினதும் பொதுவான எதிர் பார்ப்பாகும். ஒரு சமூகக் கட்டமைப்பின் அடிப் படைத் தூண்டியாகவும் உத்வேகத்தை ஊட்டுவ தாகவும் ஒரு தேசத்தின் நிலையான கட்டுமாணங்களைத் தீர்மானிப் பதாகவும் கல்வி விளங்குகின்றது. இதனை முனைப்புடன் முன்னெடுத்துச் சென்று சமூக உள்ளடக்கத்தின் ஓர் அங்க மாகத் திகழும் மானிட நேயங்களின் மகத்தான வளர்ச் சிக்கும் மனித சாம்ராஜ்ஜியத்தின் எழுச்சிக்கும் உதவும் வகையிலான திட்டமிடல்களும் செயலூக்கங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். **இதுதான் கல்வியின் மூலம் அடைய முனைகின்ற அடிப்படை அம்சமாகும்.**

ஒரு நாட்டின் அடிப்படை நோக்குகளுள் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கும் நிலை அனைத்து நாடுக ளிலும் பரவலாக காணக்கூடிய பொதுவான அம்ச மாகும். அறிவினைக் காவிக் கொண்டு சென்று அதன் மூலம் மானி டர்களின் ஆளுமை விருத்தியை வேகமாக வளர்த்துக் கொள்ள பல பிரயத்தனங்களும் பிரசா ரங்களும் முடுக்கி விடப்பட்டுக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில், கல்விக்கான தேவைகளையும் அதனால் எய்தக்கூடிய தகை மைகளையும் விட்டொதுக்க முடியாத ஒரு சூழ்நிலை அண்மைக் கால கல்விச் செயற்பாடுகளில் காணப்படு வதை அவதானிக்க முடிகின்றது. இதனை ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் முதல் அடி நிலைப்பட்ட மக்கள் வரையான அனைத்துத் தரப்பி னரும் நன்றாகவே விளங்கி வைத்திருப்பது கவனிக்கத் தக்கது

கல்வி என்பது கருவறை தொடங்கி கல்லறை வரையும் நீடிக்கக் கூடிய ஒரு முதுசொத்தாகும். இதனை மென்மேலும் வளர்த் தெடுக்கும் பணிகள் கால நேர வர்த்தமானங்களுக்கேற்ப பல பரிமாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங் கையைப் பொறுத்தவரை கல்வி தொடர்பாக தேசிய ரீதியில் உயரிய வேலைத் திட்டங்களும் முயற்சியாண்மைகளும் நிதி ஒதுக் கீடுகளும் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதை அண் மைக்கால கல்வி தொடர்பான கருத்தாடல்கள், கொள்கை வகுப்புக்கள், செயற்திட்டங்கள் வாயிலாக நன்கு விளங்கிக் கொள் ளலாம். இவையெல்லாம் ஏன் முன்னெடுக்கப்படுகின்றன? என்ற வினாவை எழுப்பினால், கல்வி என்பது மனித வாழ்வின் எதிர்கால உயர்விற்கான ஒரு முதலீடாகவே உலகின் அனைத்து அரசுக ளாலும் கருதப்படுகின்ற தன்மையை அறிந்து கொள்ளலாம்.

இதற் காக தனியானதும் பொதுவானதும் தரமானதுமான நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்பட்டு பொருளாதார, பௌதீக, மனித வளங்கள் உள்வாங்கப்பட்டு, கால நேரங்களும் செலவு செய்யப் பட்டு வருகின்ற நிலை உலகளாவிய ரீதியில் குறிப்பாக, எமது நாடான இலங்கையில் மிகத் தீவிரமாக இருப்பது அனைவரி னதும் அவதானத்திற்குரியதாய் உள்ளது. இந்தப் பின்புலத்தின் அடிப்படையில் கல்வி எதிர்பார்க்கின்ற சிறந்த மானிடத்தை இலங் கையில் நடைமுறையிலுள்ள கல்வி முறைமையானது வழங்கி யுள்ளதா? இல்லையா? என்ற கருத்தாடலை நோக்குவது பொருத்த மானதாக இருக்கும்.........

**(பார்வை நீளும்...)**

# ஒருநாள் கூலியாகிவரும்

## வெளியக தனியார் கல்வி நிலையங்கள்




**M.N.M.Rinoos**
(Dip in Civil Eng) / Post Master IT


அண்மையில் எனது பிள்ளை என்னி டம் ஒரு முறைப்பாட்டை முன்வைத்தார்.

தனது பாடசாலை மாணவி விசேட Tution Class க்கு வருவதை நிறுத்தி விட்டாள். காரணம் கேட்டதற்கு எனக்கு வாப்பா இல்லை. உம்மாதான் எங்களை பார்ப்பது.

”முந்தி எல்லாம் எனக்கு எங்கட மாமா மாச காசு டியூஷன் கிளாஸூக்கு தருவாங்க.

இப்ப ஒவ்வொரு நாளும் காசு கொடுக்க வேண்டிய இருப்பதனால காசு கொடுக்க கஷ்டமாக இருக்கு. அதான் உம்மா சொன்ன வெளி டியூஷன் போகவேணாம் எண்டு. “அதான் நான் வாரல... ”

உண்மையில் தனியார் கல்வியின் அவசி யத்தை நான் உணர்ந்தவன். இருந்த போதும் மாத முடிவில் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு இலகுவான வழிமுறை. ஏனெனில் பெற்றோர் தன் பிள்ளையின் கல்விக்கு ஏதோவொரு வகையில் அன்றைய தினத்தில் தங்களின் ஒருவேளை சாப்பாட்டை மீதம் பிடித்தாவது காசை கொடுத்துவிட முடியும்.

இன்றுள்ள நாளாந்த கொடுப்பனவு முறை யில் அன்றாடம் கூலி தொழில் செய்யும் பெற் றோர்கள் மட்டுமன்றி இடைநிலை சம்பளம் பெறும் என்னைப்போன்ற அரச ஊழியர்கள் கூட பெரியதொரு நடைமுறை சிக்கலை எதிர்நோக்கவேண்டி ஏற்படுகின்றது.

உதாரணமாக, ஒரு குடும்பத்தில் 3 பிள் ளைகள் வெளிவகுப்பு செல்பவர்களாக வைத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு ஒரு வேளை வகுப்புக்கு மட்டு மே 100 ரூபாய் தேவை. ஒரு நாளை யில் 2 வகுப்புகள் என்றால் 200 ரூபாய் மூன்று பிள்ளைக் கும் தேவைப்படுகின்றது.


ஒவ்வொரு நாளும் இவ்வாறு 200 கொடுப்பது உண் மையில் சிரமம் தான். அத்தோடு 1 மணி நேர வகுப்புக்கு 30-50 ரூபாய் வரை பணம் அறவிடப்படுகின்றது. இதனால் அதிகபட்சம் 250 ரூபாய் மாதாந்த கொடுப் பனவு எடுக்கப்பட்ட நிலை இப்போது 350-500 வரை சென்றுள்ளது.

நமது ஊரின் நிலைப்பாட்டை கருத்தில்கொண்டு மேலதிக தனியார் கல்வி நிலையங்கள் நடைமுறைக்கு ஏற்றால்போலான ஒரு சாத்தியப்பட்டை உருவாக்குங்கள். நாமும் மிக கஷ்டமான சூழலில் இருந்துதான் இந்நிலையை அல்லாஹ் நமக்கு தந்துள்ளான் என்று நினைவில் கொள்ளுங்கள்.



# குறுக்கெழுத்துப் புதிர் போட்டி இல : 03

**40 விபரிப்புகள் தரப்பட்டுள்ளது. அவைகளுக்குரிய பொருத்தமான விடைகளை கீழே அம்புக்குறி காட்டும் திசையிலுள்ள வெற்றுக்கூடுகளினுள் அதே திசையிலேயே கூட்டுக்கு ஒரு எழுத்து வீதம் நிரப்புக.**




1. இந்தியாவின் பிரதமராக இருந்த பொருளாதார நிபுணர்.
2. யுத்தகாலங்களில் மூதூரின் விவசாயம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது என்பதற்கு உதாரணம் “ **இது** எப்படி உற்பத்தியாகின்றது என்ற கேள்விக்கு ஒரு மாணவன் எழுதியிருந்தான் அரிசியை கடையில் வாங்கி ஒவ்வொரு அரிசியையும் உமியினால் பொதிசெய்து உற்பத்தியாக்கப்படுகின்றது “ என்று
3. சம்பூரில் மட்டும் அனல் மின் நிலையம் அமைக்கப் பட்டிருந்தால் நம்மை **இது** நனைந்திருக்கும். என்ன கொஞ்சம் எரியும் அவ்வளவுதான்.
4. **இது** ஆற்றைக் கடக்க உதவும். இதற்கு பல பெயர் இருந்தாலும் நம்ம குறிப்பிடும் இந்தச் சொல் மூதூருக்கே உரிய சிறப்புப் பெயராகவும் இருக்கலாம். ஏனென்றால் எந்தப் பாடப் புத்தகங்களிலும் இந்தச் சொல்லை சந்திக்க வில்லை.
5. **இந்தப்** பாடத்தில் கோழி வளர்ப்பென்று ஒரு பாடம் உள்ளது. கோழி வளர்ப்புப் பாடமெடுத்த ஆசிரியர் சந்தேகம் ஏதாவது இருந்தால் கேட்கச் சொல்லியி ருக்கின்றார். மாணவனோ பாம் (Farm) கோழி முட்டைக்கும் நாட்டுக் கோழி முட்டைக்கும் என்ன வித்தி யாசம் என்று கேட்க ஆசிரியரும் “பெரிசாக ஒன்றும் இல்லை ஒரு 50 சதந்தான் வித்தியாசம் என்றிருக் கின்றார்” ஐந்து ரூபா என்று மல்லுக்கு வந்துவிடாதீர்கள் இது நடந்தது அந்தக்காலம்.
6. **இது** எதிரிகளிடமிருந்து தப்ப வாலைப் பயன்படுத்தும்.
7. **இது** அதிகாலையிலும் மாலையிலும் வானை அலங் கரிக்கும் கோள். மதங்கள் சொன்ன நரகத்தை பார்ப்ப தாயின் இந்தக்கோளில் பார்க்கலாம். மிகச் சூடான கோள். இங்கு நெருப்பு ஆறுகள் ஓடுகின்றன.
8. **இதன்** வேகம் செக்கனுக்கு 3 இலட்சம் கிலோமீற்றர்கள். இதன் வேகத்தில் நீங்கள் பயணித்தால், ஒரு செக்கனில் பூமியை ஏழரைத் தடவை சுற்றி வரலாம்.
9. ஒரு இருபது வருடங்களிற்கு முன்னர் மாணவர்களின் போட்டோக் கொப்பி மெசின் **இந்தத்** தாள்தான். சமூகக் கல்வி, புவியியல் படிக்கும் மாணவர்கள் கட்டாயம் இதை வைத்திருப்பார்கள்.
10. சிகிரியாவை படித்து, சிகிரிய ஓவியங்களை ரசித்து, அதன் கட்டிட நுணுக்கங்களை வியந்து இதை யார் கட்டியது என்று கேட்கும் மானவனுக்கு விடையாக **இவர்** பெயரைச் சொல்லிக் கொடுத்தால் அது கற்றல். சோத னைக்கு வரும் என்று சிகிரியாவைக் கட்டடியவன் இவர் என்று சொல்லி அவனை சிகிரியாவைத் தெரிய விடாமல் ஆக்குவது .................. இதுவும் கற்றலாம்?!
11. முன்னரெல்லாம் **இது** அருந்துபவர்கள் இதை அருந்தி விட்டு சந்தியில் நின்று ஊரில் நடக்கும் அசிங்கத் தையெல்லாம் பயமின்றிப் பேசுவார்கள். இவர்கள் வாய்க்குப்பயந்து பல அதிகாரிகள் பெரிய மனிதர்கள் தப்புச் செய்ய பயப்பட்டார்கள். இப்போது இது அருந்தும் கெட்டவர்கள் இல்லாமல் போய் நல்லவர்கள் அதிகரித்து எதிர்காலத்துக்கு தேவைப்படுவார்கள் என்று கண் முன்னே நடக்கும் தவறுகளை சுட்டிக்காட்டத் தயங்கு வதால் எல்லாம் தப்புத்தப்பாகவே நடக்கின்றது.
12. அவரவர்க்கு ஏற்றாற்போல் நடித்து வழும் மனிதர்க ளுக்கு **இந்த** மீனை உவமையாக குறிப்பிடுவது வழக்கம்.
13. வயதான இந்து மத நம்பிக்கையாளர்கள் **இதற்குப்** போக அதையே சேர்த்து வைப்பது வழமை.
14. **இவனுக்கு** புல்லும் ஆயுதம் . அதனால்தான் இப்பவுள்ள இவன் எல்லாம் “புல் (Full)” ஐயும் கொடுத்து வைக்கவேண்டியதையும் வைத்து சாதிக்கின் றார்கள் என்று நினைக்கின்றேன்.
15. சிங்கத்துக்கு அணில் அப்பனாக இருந்தால் சிங்கத்தின் பெயர் **இப்படி** ஆகிவிடும்.
16. **இவர்** இராணுவ அணி வகுப்பில் சொந்தப் படைவீரர் களால் சுட்டுக்கொல்லப்பட்டவர். பெயரின் கடைசி எழுத்துத் தவறியுள்ளது.
17. சலங்கை ஒலி: இந்தப்படம் நாட்டியக் கலையுடன் காதல் கதையை இணைத்து உருவாக்கப்பட்ட கலைப் படைப்பு. நாலு சண்டை இரண்டு குத்து டான்ஸ் வைத் தால்தான் வெற்றிப்படமாகும் என்ற கருத்தை உடைத்து 550 நாள்கள் திரையில் ஓடிச் சாதனை புரிந்த படம். “காம்பினில் பசும் பால் கறந்தால் அதுவா சாதனை. கொம்பிலும் நான் கொஞ்சம் கறப்பேன் அதுதான் சாதனை” என்று பாடிய நடிகரின் படம் **அது.**
18. சில ஜின்கள், தெய்வ சக்திபெற்ற பாபாக்கள் எல்லோ ரும் மக்கத்துச் சாம்பிராணி, சிவலிங்கம் திருநீறு இதெல் லாம் வாய் கைகளில் இருந்து எடுத்துத் தருவார்கள். அவர்களிடம் **இந்தப்** பழம் ஒன்றை எடுத்துத் தரச் சொல்லுங்கள் ஓடிவிடுவார்கள். ஏனென்றால் அவர்க ளால் மறைத்து வைக்கக் கூடிய சிறிய பொருட்களைத் தான் எடுத்துத் தர முடியும்.
19. **இவர்** கண்டுபிடிப்பொன்றை உருவாக்குவதற்கு ஆயிரம் தடைவ வரை முயற்சிசெய்து வெற்றிபெற்றார் . இதை 999 தடவை தோல்வியைசந்தித்தாரா? என்ற கேள்விக்கு 999 வழிகளில் அக்கண்டுபிடிப்பு சாத்திய மில்லை என்று கண்டுபிடித்திருக்கின்றேன். என்றார்.
20. **இது** 19 வது விடையை எழுதுவதற்காக அம்புக்குறி இடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கும் திசையில் எழுதும் மொழி
21. மூதூரில் தியேட்டர் இருந்த காலத்தில் படத்துக்குப்போக பெருநாள் மட்டும் தான் அனுமதிப்பார்கள். பல வீடுகளில் அதற்கும் அனுமதியில்லை. படம் பார்த்தல் சாரயாம் குடிப்பதற்கு அடுத்தபடியாக இருந்த கெட்டபழக்கமாகப் பார்க்கப்பட்டது. பின்னாளில் இதை மறுத்த வா(அ)ப்பாக்கள் டீவி என்று வீட்டில் தியேட் டரை நிறுவினார்கள். இப்போது ஒவ்வொரு பிள்ளை யினதும் கைகளிலும் தியேட்டரை நிறுவியிருக் கின்றார்கள். இது சொல்லவருவது கொள்கை. கருத்து, நன்மை , தீமை,.. .... எல்லாமே **இது** அடைந்தே ஆகவேண்டும்.
22. **இவர்** ஸ்பேஸ் எக்ஸ் இன் நிறுவனர். எப்படியும் நம்மளை எல்லாம் செவ்வாய்க் கிரகத்துக்கு விசா கேட்டு வரிசையில் நிக்க வைத்துவார் போல்தான் இருக்கின்றது.
23. இனப் படுகொலை இப்பொழுது **இந்த** நாட்டின் அடையாளம்.
24. தினகரன், வீரகேசரி, தினக்குரல், டெய்லிமிரர், இப்படி நாளிதழ்கள் இருப்பது தெரியும். **இந்தப்** பெயரில் ஒரு நாளிதழ் இருந்தது. இதைத் தெரிந்து கொள்வதென்றால் நீங்கள் உங்கள் வயதான உறவுகளுடன் கதையுங்கள். கதைக்க வைத்த நன்மையை நாங்கள் பெற்றுக்கொள் கின்றோம்.
25. வறல் நிலத்தில் வாழ தன்னைப் பழக்கிக்கொண்ட தாவரம் **இது**
26. உறவுகளை இணைக்கும் சீமேந்து. **இது** உள்ளத்தில் உற்பத்தியாவது.
27. **இது** உறவுகளில் ஒன்று. பெண்பாற் சொல்
28. **இது** வாய்க்குள் விசத்தை வைத்திருந்தா லும் அதன் சாவு விசத்தினால் இல்லை.
29. பழைய நம்பிக்கையின்படி பாம்பிற்கு மாபெரும் இரை கிடைக்கும் நிகழ்வு
30. **இது** Innoveative இந்த ஆங்கிலச் சொல்லின் தமிழ்.
31. கல்வி அபிவிருத்திக் கூட்டமொன்றில் எல்லாப் பிரச்சிகைக்கும் தீர்வு உண்டு தகுந்த தீர்வை தேர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய ஒருவர் அந்தக் கருத்தை வலுவாக்க “கை சூப்பிக்கொண்டே இருக்கும் சிறுவனின் அந்தப் பழக்கத்தை நிறுத்தனுமா? கழிசானை கொஞ்சம் லூசாக தைத்துக் கொடுங்கள் “ என்றார்.

   இதனை இன்னுமொரு வழியிலும் சொல்லலாம் அது “எல்லாப் பூட்டுக்களும் **இதனுடன்** தான் தயரிக்கப்படு கின்றன.” அந்த இது தான் அது.
32. “உன்ட புள்ள ஓடிட்டு சரி. நீ திட்டிரவன் பேரைப் பார்த்தா கூட்டிக்கிட்டு ஓடியவன் கிறிஸ்தவன் மாதிரியல்லவா இருக்கு!” “இல்ல கூட்டிக்கிட்டு ஓடினவன் நம்ம சாதிதான். டெலி போனை கண்டுபிடிச்சவன் அவன் தானே! அதுதான் அவனுக்கு திட்டுகின்றேன்.”

   திட்டு வாங்கும் கண்டுபிடிப்பாளரின் பெயர்தான் **இது.**
33. **இது** மஞ்சள் நிற அலோகம். இறப்பரில் தயாரிக்கப்பட்ட டயரின் நீண்ட பாவனைக்கு இது தேவை.
34. மீண்டும் எலக்சன் வரும். இராஜபக்சகளின் பூச்சாண்டி காட்டப்படும். ஓட்டுக்கள் வாங்கப்படும். எவரைச் சொல்லி பயமுறுத்தினார்களோ அவருக்கே இவர்கள் வாக்களிப்பார்கள். இது ஒரு **இது.**
35. “இரண்டு கண்களும் இரண்டு கண்களும் சந்தித்தபோது நான்கு கண்களும் குருடாயின!” **இந்த** வியாதி இளையவர்களுக்குத்தான் அதிகம் ஏற்படும்.
36. “செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத் தில் வீழ்ந்தாயடா “ என்ற பாடல் வரி கர்ணனுக்கு மட்டு மல்ல இரும்புக்கும் பொருந்தும். இரும்பை, செம்பு வெள்ளி போன்ற உலோகங்களுடன் சேர்த்து வைத்தால் அரிப்ப டைந்து அழிந்து போகும். இதைப்பற்றி மேலும் தெரிய தரம் 10 விஞ்ஞான பாடப்புத்தகத்தில் **இதைப்** படிங்க.
37. கடவுள் ஏன் **இந்த** நம்பிக்கை உடையவர்களை அதிகம் சோதிக்கிறார் என்றால். சோதனைகள் குறைந்த, வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த நம்பிக்கை குறைந்து வருவதை தகவல்கள் சொல்லுகின்றன.
38. நீரில் தேன்றி தரைக்கு வந்து கூர்ப்பில் முன்னேறி தான் உருவான இடத்தையே நாசப்படுத்தும் உயிரினம்.
39. **இது** ஆப்கானிஸ்தானின் நகரம். இந்திய விமானம் கடத்தப்பட்டதில் பிரபல்யம் பெற்ற பெயர்.
40. பெண் பற்றிய இரசாயன குறிப்பு ஒன்று சொன்னது குறியீடு WoMen, நிறை 50 கிலோ 250 கிலோ வரை வேறுபடக்கூடும். ஆண்கள் காணப்படும் எல்லா இடங் களிலும் காணப்படும். இந்த உலோகத்துடன் நன்கு தாக்கமுறும். கையாளுவதற்கு அதிக கவணம் தேவை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல : 02 இற்கான விடைகள்



## படம் பார்த்து கவிதை சொல்வோம்

நேர் எதிர்மறை கொண்ட சிந்தனையுடனான கவிதைப் போட்டி

**உங்கள் பெயர் முகவரியோடு 40 சொற்களுக்கு உட்பட்ட வகையிலான கவிதைகளை 0097474747533 என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்புங்கள்.**



### Price :

| | |
|---|---|
| 1st 2000 | புகைப்படத்துக்குப் பொருத்தமான கருத்தை வெளிப்படுத்தக்கூடிய கவிதை மாத்திரமே தெரிவுசெய்யப்படும். |
| 2nd 1000 | |
| 3rd. 500 | |

போட்டிகளுக்கான விடைகளை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

## பொது அறிவு பொது விவேக வினாக்கள் - போட்டி: 03

01. அதிகளவிலான நூலகங்களை கொண்ட இரண்டாவது இடத்தில் இருக்கும் நாடு எது?

02. WHO ஆல் கொரோனா வைரஸ் Covid 19 என அறிவிக்கப்பட்டது?

03. Van எனும் சொல்லிற்கு 37, Var எனும் சொல்லிற்கு 41 எனவும் பெறுமானம் கணிக்கப்படுமாயின் ஏயவ என்ற சொல்லிற்கான பெருமானம் யாது?

04. தேசிய கொடியில் பல வர்ணங்களை கொண்ட நாடு எது?

05. இலங்கையில் அதிகமாக பயன்படுத்தப்படும் நாணயத்தாள் எது?

06. 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பையில் தங்கப் பாதணிகளை பெற்ற வீரர் யார்?

07. உலகில் மலைகள் காணப்படாத நாடு எது?

08. இருபதாம் நூற்றாண்டில் ஐக்கிய இராச்சியத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களின் எண்ணிக்கை யாது?

09. உலகில் குற்ற நடவடிக்கையின் விகிதம் அதிகமாக உள்ள நாடு எது?

10. அதிக ஆசிரியர்களின் எண்ணிக்கை கொண்ட நாடு

## இதழ் : 02 இற்கான போட்டி வெற்றியாளர்கள்

### குறுக்கெழுத்துப் புதிர்

**01 PRICE - 2500.00**
NM. ASRIF
JAYA ROAD, MUTUR.

**02 PRICE - 1500.00**
AK. SALMAN
NADUTHEEVU,MUTUR.

**03 PRICE - 1000.00**
J.F. HAYA
NAITHAL NAGAR,MUTUR

### பொது அறிவு, பொது விவேகம்

**01 PRICE - 1500.00**
B.F. SAMA
A.C. ROAD, MUTUR.

**02 PRICE - 1000.00**
E.M.S.SUHAIL AHAMED
JINNA NAGAR, MUTUR.

**03 PRICE - 500.00**
M.S.F. NATHA
T/M/ANNAHAR G.M.V

### படம் பார்த்து கவி படை!

**01 PRICE - 2000.00**
Mr. AH. Mowjooth B.A
Thoppur.

**02 PRICE - 1000.00**
O.M. Mafas
Kinniya.

**03 PRICE - 500.00**
M.A. Nazeema
Trincomalee.

**இதழ் 01 இன் வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டபோது...**



## மனித உடல் ஒரு தொழிற்சாலை

- எமது உடல் ஒரு தொழிற்சாலை என்பதை நீங்கள் அறிவீரா?
- ஒரு ஆரோக்கியமான மனித உடலில் என்னென்ன இருக்கிறது என்று கவனிப்போம்
- 46லீட்டர் நீர் இருக்கிறது
- 7 சவர்க்காரக்கட்டி செய்வதற்கு தேவையான கொழுப்பு இருக்கிறது
- 900 பென்சில்கள் செய்வதற்கு தேவையான கார்பன் இருக்கிறது
- 2200 தீக்குச்சிகள் உருவாக்க தேவையான பொஸ்பரசு இருக்கிறது
- ஒவ்வொரு மனித உடலிலும் சராசரியாக 5லீட்டர் இரத்தம் உள்ளது. இதில் 25கோடி இரத்த அணுக்கள் இருக்கிறது.
- 20V உள்ள மின்குமிழ் சிறிது நேரம் எரிவதற்கு தேவையான மின்சாரம் உள்ளது



**NALEEM MOHAMED AFLAL**
GRADE 08
T/MU AYISHA VIDYALAYAM

## எழுந்திரு தோழா....



**A.S.F.Safana**
Batticaloa Road
Mutur - 04

உன் வாழ்வு அது
ஒரு முறை – இங்கு
காயங்கள் பலமுறை
தயங்காதே தாண்டி வா!

மண்ணோடு போரிட்டு
விதைகள்
தளிரிட்டது
தொடர்ந்து போராடு
வெற்றியும்
உனதாகும்
எழுந்திரு தோழா!



## சர்வதேச குறியீடுகள்

01.ஒலிவ் மரத்தின் இலை - சமாதானம்
02.வெண்புறா - சமாதானம்
03.சக்கரம் - வளர்ச்சி
04.தாமரை - பண்பாடு, நாகரீகம்
05.கையில் or சட்டையில் கருப்புத்துணி - துக்கம்
06.கறுப்புக்கொடி - எதிர்ப்பு
07.எழும்பு நடுவில் மண்டையோடு - ஆபத்து
08.சிவப்பு விளக்கு - மருத்துவமனை, ஆபத்து
09.செஞ்சிலுவை - செஞ்சிலுவைச் சங்கம்
10.செம்பிறைச்சங்கம் - அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம்



**NALEEM FATHIMA SAFNA**
13A- ARTS
T/M M L C

## விழிப்புணர்வு



நீ எதை தவிர்க்க முயற்சி
செய்தாலும் - அது உன் மனதில்
விழிப்புணர்வின் அடித்தளமாக மாறிவிடும்

இவ்வாழ்வில் அக்கறையோடு இருக்கிறோமா?
என்றால் இல்லை - உண்மையில் எங்கு
இருக்கிறோம் என்பதைவிட எப்படி
இருக்கிறோம் என்பதே முக்கியம்

எந்தவித மனப்பாங்கும் தத்துவமும் இல்லாமல்
வெறுமனே ஏன் உங்களால்
இவ்வுலகில் வாழ முடியவில்லை - ஏனெனில்
மாந்தர் மனம் எதிர்பார்ப்பது - விழிப்புணர்வு

**LAFEER FATHIMA HANA**
GRADE 10
T/MU/SATHAM VID.



## சத்தியம் தாயே !

பத்து மாதம் கருவில் சுமந்து பாசமாய் வளர்த்தாயே
நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி நித்தியமாய் உழைத்தென்னை
சமுதாயம் போற்ற ஆளாக்க வேண்டுமென்றோ ஊருராய் கடன் பட்டு- என் கடன் தீர்த்தாய்
நீ ஆலோசனை அளித்த நிமிடங்கள் அறியாமையின் உச்சத்தில் இருந்தேன்.
சத்தியம் செய்கிறேன் தாயே!
நித்தியமாய் உனைக் காப்பேன்.



**IFTHI FATHIMA AFROZ**
Nooraniya road,
T/M/Al Mina M. V

## The Wonders Of Nature

*Nature ! Nature ! So lush and green,*
*The wonder of wonder anyone has seen*
*So cool,*
*calm and full of life*
*Makes us forget all our strife*
*Think of a forest full of trees,*
*Fluttering and dancing in the breez*
*Cut them down and construct towers*
*Wait for ages to get a shower*
*The birds that soar high in the sky,*
*Can we imitate them however hard we try*
*Lern to wonder and gape at things,*
*And see the happiness it brings*
*We have got such wonderful things,*
*Do what you can & save a wing*
*So that our children in future,*
*Can see the things we have natured.*



**N.M.Ashrif**
Grade - 10, T/M C C






**WhatsApp - 074 081 878 2**

**மாணவர்களாகிய உங்களின் ஆக்கங்களையும் இதில் பிரசுரிக்க விரும்பினால் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் மேலுள்ள வட்ஸ்அப் இலக்கத்துக்கு உங்கள் புகைப்படங்களுடன் அனுப்பி வையுங்கள்.**

# ஆசிரியர் தினம்

கர்ப்பத்தில் குதித்தெழுந்த எம்மை

அறிவுப் பாசறைக்குள் அன்புடன்
அழைத்துச் சென்றவர் நீர்

உம் புகழை உலகோர் அறிய

உமக்கோர் ஆசிரியர் தினம்
விஞ்ஞானிக்கோ விஞ்ஞானியர்
தினமும் இல்லை

வைத்தியருக்கோ வைத்தியர்
தினமும் இல்லை

மா மேதையர்களுக்கோ மேதையர்
தினமும் இல்லை
பொறியியளாலருக்கோ
பொறியியலாளர் தினம் இல்லை

ஆசான்களே சிற்பங்கலாய்

செதுக்கும் அற்புத சிற்பி நீங்களே




S.M. SIFRAS
GRADE 11
T/M/AL-MANAR VIDYALAYAM.


## பொன் மொழிகள்

01. நான் முதலை இல்லாத குளத்தில் படகோட்ட விரும்பவில்லை - **அல்லாமா இக்பால் ( மகாகவி )**

02. எந்த விதமான உலகை நீ பார்க்க விரும்புகிறாயோ அதுபோல நீமாறு - **மகாத்மா காந்தி**

03. துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன - **எல்பர்ட் ஐன்ஸ்டைன்**

04. இரவு எனும் காரராக் கிரகம் நம்மைச் சூழ்ந்திருக்கும் போதெல்லாம் காலைப் பகலவனின் அற்புத வெளிச்சம் நெருங்கி விட்டதே என்று அர்த்தம் - **நேதாஜி ( இந்தியா சுதந்திர ஆயுதப் போராட்டத்திற்கான தளபதி )**

05. கீழான இலட்சியத்தில் வெற்றி காண்பதே விடவும் உயர்ந்த இலட்சியத்தில் தோல்வி காண்பது சிறந்தது - **பிரவுனிங்க்**

06. நாம் செய்யும் ஒரு விசயத்தை சிறந்ததாக்க நம்மால் முடிந்தளவு உழைப்பைக் கொடுக்கவேண்டும். "முடிந்தளவு" அதைக் கடைசிவரை கொடுக்க வேண்டும். - **பிரவுனிங்க்**


N.M. INSHAF
GRADE 10
T/M/MUTUR CENTRAL COLLEGE


## இன்றைய தலைமுறைக்கு ஓர் ஞாபகமூட்டல்

"உயர்ந்த சிந்தனை, சளையாத உளைப்பு, தீவிர சாதனை இவைகளின் மூலம் அழியாத ஓர் இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் அப்போதுதான் வாழ்நாள் பயனுள்ளதாகும்."

**முகம்மது மன்சூர், றாபியா உம்மா தம்பதிகளுக்கு 1958-11-08ஆம் திகதி பெரும் அருட்கொடையாக முகம்மது றெஸீன் (ஆசிரியர்) பிறந்தார்.**



இவர் கிழக்குப் பல்கலைக்கழகம் "வந்தாறு மூலையில்" தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். அவர் ஆங்கில மொழி மூலம் விஞ்ஞான சிறப்புப் பட்டதாரி ஆவார். இதன் விளைவாக இவருக்கு முதல் நியமனம் அக்கரைப்பற்று மத்திய கல்லூரியில் கிடைத்தது. அதன் பின் மூதூர் மத்திய கல்லூரியில் தனது பணியைத் தொடர்ந்தார்.

இவரது மனைவி சிந்நி உம்மா என்பவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். 1993-01-25ஆம் திகதி பாடசாலையில் மனைவியை விட்டு முதலாவது இயந்திரப் படகில் காலை 7.30 மணிக்கு திருகோணமலை கல்வித் திணைக்களத் திற்கு சென்று மூதூர் மத்திய மகாவித்தியால யத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விஞ்ஞான

உபகரணங்களைப் பெற்று அதன் பின்னர் 3.30 மணி இயந்திரப் படகில் றெஸீனும் ஒருவராக ஏறிக்கொண்டார். பாதாள மலையை இயந்திரப் படகு நெருங்கிய போது கடல் பெரிதாகப் பொங்கி எழுந்தது. படகில் உள்ள பெண்களும், சிறுவர்களும், முதியோர்களும் ஓலமிட்டு அழலாயினர். இடையே பாரிய அலை ஒன்று இயந்திரப் படகில் மோத, படகின் பலகைகள் உடைந்து சிதற இயந்திரப் படகு மெல்ல மெல்ல கடலில் மூழ்கியது.

அந்த விபத்தில் பெண்கள், சிறுவர்கள், பெரியோர்களின் ஆத்மாக்களுடன் றெஸீனின் ஆத்மாவும் கடலின் அடியில் சங்கமித்தது. பின்னர் கடற்படையினர் தேடுதலில் ஈடுபட்டபோது றெஸீனின் நாற்குறிப்பேடு (டயரி) கண்டெடுக்கப்பட்டது. **அதில் உமர் கையாமின் கவிதை வரிகள் சில எழுதப்பட்டிருந்தன.** அவை.

எழுதிச் செல்லும்
விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது போற்றி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்

வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தையேனும் மாற்றிடுமோ
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ என்ற கவிதை வாழ்வின் தத்துவத்தை விளக்கியது.

**அல்லாஹ் அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவர்க்கத்தை அளிப்பானாக ஆமீன். ஆதாரம் : சங்கமம்**


Ameera Aarif,
Grade-11,
T/M/M.M.L.C


## உலகின் சாதனைப் பெண்கள்

01. உலகின் முதல் பெண் அதிபர் யார்? இஸபெல் பெரோன் (ஆர்ஜென்டினா-1974)
02. உலகின் முதல் பெண் பிரதமர் யார்? சிறிமாவோ பண்டாரநாயக்க (இலங்கை-1960)
03. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாட்டின் முதல் பெண் தலைவர் யார்? விக்டிஸ் ஃபின் போகோடோட்டிர்
04. முதல் கறுப்பின பெண் நீதிபதி யார்? ஜேன் மடில்டா போலின் (நியூயோர்க்-1939)
05. ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் ஆசிய பெண்மணி யார்?
    ஆரதி சாஹா (இந்தியா-1959)
06. வரலாற்றில் பதிவான உலகின் முதல் புகழ் பெற்ற பெண்மணி யார்?
    ஹாட்ஷேப்கட் (1479)
07. ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற முதல் பெண்மணி யார்?
    சார்லோட்டை கூப்பர்
08. 100 நாட்களில் தனியாக உலகை படகுமூலம் சுற்றி வந்த பெண்மணி யார்?
    எர்லன் மக்ஆர்தர் (ஆங்கில கடற்பயணி)
09. கனடாவின் முதல் பெண் பிரதமர் யார்? கிம் காம் பொல்




A. F. SASNA - T/AL-MINA M.V (A/L) - 12 ARTS

# முத்திதழ் வாழ்த்து

- பெயர் - சமீம் சல்மான் குர்ஷித்
- தந்தை - அப்துல் மஜீத் சமீம்
- தாய் - கச்சி ஜெய்னுதீன் ஹூ தா
- பிறப்பு - 2002.02.19 (17 வயது)
- பாடசாலை :
- 1- 9 : தி/மூ/ஆயிஷா வித்தியாலயம்
- 9-11: தி/மூ/ அல்ஹிலால் மத்திய கல்லூரி
- A/L தி/மூ/ மூதூர் மத்திய கல்லூரி
- பிரதேசம் - நெய்தல் நகர்





அப்துல் மஜீத் சமீம் , ஜெய்னுதீன் சுஹ்தா தம்பதியின் முதன்மை புத்திரனே சமீம் சல்மான் குர்ஷித் என்பவர். தரம் 10 இல் 2017 இல் புத்தாக்கப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு சக்தி வள முகாமைத்துவம் என்ற தலைப்பில் தேசிய ரீதியாக இரண்டாம் இடம்பெற்ற மூதூரின் முதல் மாணவன் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

தி/மூ/ ஆயிஷா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் தி/மூ/ மூதூர் மத்திய கல்லூரியின் தற்போதைய மாணவருமான இவர் சிறு பராயம் தொடக்கம் இத்துறையில் ஆர்வம் கூடியவர் என்பதை அவரின் ஒன்றுவிட்ட சகோதரன் என்ற வகையில் நான் அறிவேன். அத்துடன் இவரின் முயற்சியில் இவரின் பெற்றோர் பெரிதும் துணையாக நின்று இவருக்கு ஊக்குவிப்பும் வழங்கியுள்ளனர்.

ஆனால் இன்றைய காலங்களில் இவ்வாறான பெற்றோர்களை காண்பது அரிது. காரணம் ஒரு குழந்தையின் ஆர்வத்தை இனங்காண்பதில் பெரிதும் தவறு இழைக்கின்றனர்.

அந்தவகையில் மூதூரின் இளம் கண்டுபிடிப்பாளர் என்ற பெருமையை தேசிய ரீதியல் பெற்றுக்கொண்ட இவர் மூதூரின் தற்கால இளம் தலைமுறைக்கு முன்மாதிரிமிக்கவராக சுட்டிக் காட்டப்படவேண்டிய ஒருவராகவும் திகழ்கின்றார்.

தற்போது கா.பொ.த உயர்தரப்பிரிவில் தொழிநுட்பக் கற்கையை மேற்கொண்டுவரும் இவரின் கல்வி, மற்றும் எதிர்கால வாழ்வு வெற்றிபெறவும் இவ்வாறான பயனுள்ள ஏனைய கண்டுபிடிப்புக்களை வெளிக்கொணரவும் மூதூர் மக்கள் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதில் அகமகிழ்வு அடைகின்றோம்.

**கண்டுபிடிப்பு - சூரிய ஒளி வீட்டு மின்சுற்று**

**தற்போது சூரிய ஒளி தானியங்கி விவசாய இயந்திரம் நீர் இறைப்பான் மோட்டார் பற்றிய ஆய்வில் முயற்சித்து வருகிறார்.**

---

# புளிய மரம்

## பலர் அறியா மருத்துவ பயன்கள்




Dr H.M.Hariz
Medical Officer In-Charge
Central Ayurvedic Dispensary,
Mutur






நாம் எமது சுற்றாடலில் இலகுவாக பெறக்கூடிய பல்வேறு பொருட்களை எமது உணவுக்காக பயன்படுத்துகின்றோம். அவற்றில் எவ்வாறான மருத்துவ பயன்கள் நிறைந்துள்ளது என்பது நம்மில் பலருக்கு தெரியாது. அந்த அடிப்படையில் எமது உணவில் சுவைக்காகப் பயன்படுத்தும் புளியம்பழம் பல்வேறு மருத்துவ குணாதிசயங்களை கொண்டுள்ளது. அவற்றைப் பார்ப்போம்

- புளியில் விட்டமின் டீ,ஊ ,கல்சியம், பொசுபரசு, இரும்புச்சத்து போன்றவை அடங்கியுள்ளது. புளிய மரத்தின் இலை, பழம், பட்டை, எல்லாமே மருத்துவத்திற்கு பயன்படுகிறது.
- புளியமரத்தில் அல்பா ஹைற்றோலிக் அமிலம் என்கின்ற பதார்த்தம் காணப்படுகிறது இது தோலில் உள்ள அழுக்குகளை நீக்கி சருமத்தை பளபளப்பாக்கும் தன்மை வாய்ந்தது.
- எம்மில் பலர் முகத்தை அழகாக்க வேண்டும் என்பதற்காக எத்தனையோ இரசாயனங்களை கொண்ட போலி விளம்பரங்களை பார்த்து ஏமாந்து முகத்தின் அழகை கெடுத்தவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகிறேன் அந்த அடிப்படையில்
- புளியம் பழத்தின் சாற்றை எடுத்து அத்துடன் ஒரு தேக்கரண்டி தயிர் சேர்த்து ஒரு தேக்கரண்டி உப்பு போட்டு கலந்து முகத்தில் பூசி 15 நிமிடத்திற்கு பின்னால் முகத்தை கழுவினால் முகத்தின் அழகு பொலிவு பெரும். மேலும் புளியம் பழத்தின் சாற்றை தடிப்பாக பெற்று அத்துடன் தேன் கலந்து முகத்தில் தடவினால் முகம் பளபளப்பாகும் இதை வாரத்தில் இரண்டு முறை செய்ய வேண்டும்.
- முடி உதிர்வு அதிகமானவர்கள் புளியம் பழத்தின் சாற்றை தலையில் பூசி பின்பு குளிக்கும்போது முடி உதிர்வது மற்றும் பொடுகு தொல்லையில் இருந்து விடுபட முடியும்.
- குமட்டல் வாந்தி ஏற்பட்டால் சிறிதளவு புளியை வாயில் போட்டு நீரை குடித்தால் வாந்தி நிற்கும்.
- அடிபட்டு இரத்தக்கட்டு ஏற்பட்டால் புளியும் உப்பும் கலந்து அரைத்து வடிகட்டி சூடாக்கி பற்றுப் போட்டால் இரத்தக்கட்டு கரைந்துவிடும்
- புளியுடன் சுண்ணாம்பு சேர்த்து கலந்து சூட்டோடு தேள் மற்றும் பூச்சிகள் கடித்த இடத்தில் தேய்த்தால் விஷம் இறங்கும்
- புளியங்கொட்டை பருப்பை இடித்து காயவைத்து அதை வறுத்து அரைத்து பின்பு பசும்பாலில் அரைக்கரண்டி துளைபோட்டு பணங்கற்கண்டு அல்லது சர்க்கரையுடன் குடித்துவந்தால் விந்தணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.
- பல் ஈறு வீக்கம், பல் வலி போன்றவற்றிற்கு சிறிதளவு புளியை அதே அளவு உப்பும் கலந்து வலியுள்ள இடத்தில் வைத்திருந்து 10 நிமிடம் கழித்து வாயில் இருந்து புளியை துப்பி வெந்நீரால் வாய் கொப்பளிக்க வேண்டும் அந்த நீரை விழுங்கக் கூடாது இவ்வாறு மூன்று வேலையும் செய்ய வேண்டும்.
- புளியம் பூக்களை துவையலாக அரைத்து சாப்பிட்டால் தலை சுற்று, மயக்கம் நீங்கும்
- புளியமர இலைகளை இடித்து நீர் சேர்த்து கொதிக்கவைத்து மூட்டு வீக்கங்கள், சுளுக்கு ஏற்பட்ட இடங்களில் பற்றுப் போட்டு வந்தால் விரைவில் வீக்கம் மறையும் மற்றும் சுளுக்கு குணமடையும்.
- ஒற்றைத்தலைவலி உள்ளவர்களுக்கு மற்றும் வயிற்றுப்புண் மற்றும் பித்தம் சம்பந்தப்பட்ட நோய் உள்ளவர்கள் உணவில் அதிகம் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும்.
- புளியம்பழம் சாப்பாட்டு கோளாறுகளை இல்லாமல் செய்கின்றது

**விசேடமாக, கல்லீரல், இதயம் சம்பந்தமான நோயுள்ளவர்களுக்கு புளியம்பழம் சிறந்தது.**

# மக்களின் தொண்டன் மகாலிங்கம்





ஏ.எஸ். முபாரக்
ஓய்வுநிலை நூலகர்

பிரதான வீதியை விடுவோம். அதற்கு அடுத்ததாக எப்போதும் பிஸியாக இருக்கும் வீதி எது? அதுவும் இப்போது அல்ல அந்தக் காலத்தில். இது வரை அறுபதை தாண்டிய எந்தப் பெரிசுக ளிடம் இந்தக் கேள்வியை வைத்தாலும் விடை ஒன்று தான். அது நீதிமன்ற வீதி.

நீதிமன்ற வீதியா??? இந்தப் பக்கம் நீதிமன்றம் அந்தத் தொங்களில் பொலிஸ் ஸ்டேஷன். அப்படி இருக்க அங்கே எங்கே பிஸி மட்டுமல்லாமல் அவை இரண்டும் பிரதான வீதியில்தான் இருக் கின்றன. அப்படி என்றால் மருதூரில் நீதிமன்ற வீதி எங்கே இருக்கின்றது என்ற வினாவை இன்றைய இளசுகள் எழுப்பு வார்கள்.

இன்றைய மத்திய வீதிதான் அன்றைய பிஸிஸியான நீதிமன்ற வீதி. அந்த வீதி முடிவடையும் இடத்தில் தான் அன்றைய கிராமக்கோடு இருந்தது. வீதியின் ஒரு புறம் பிள்ளையார் கோவில் மறு புறம் நவரத்தின மண்டபம். அடுத்து கழரச சுழளநள பீடிக்கம்பனி அடுத்து தண்ணி அள்ள வரும் பெண்களால் நிரம்பி வழியும் மில்லுக்கணறு. இவ்வாறு மிகவும் பிஸியாக இருந்த அந்த வீதியை இரவு பகலாக கலகலப்பாக்கிய ஒரு அரங்கம் இருந்தது அது தான் ஆறுமுகம் அரங்கு.

நாடகம், கூத்து, இசைக் கச்சேரி, கலை விழா, மேடைப் பேச்சு, கருத் தரங்கு, பட்டிமன்றம் எனப் பல்வேறு நிகழ்வு களை அரங்கேற்றி மூதூரின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு பங்காற்றிய அரங்குதான் மூதூர் ஆறுமுக அரங்கு.

பூ பற்றி பேசினால் மணம் பற்றி பேசி யாக வேண்டும். அப்போது தான் அது நிறைவுபெறும். அந்தவகையில் ஆறுமுகம் அரங்கு பற்றி பேசினால் மகாலிங்கம் பற்றியும் பேசியாக வேண்டும்.

சுமார் 40 வருடங்களுக்கு முன் மூதூர் பிரதான வீதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.எஸ் ஆறுமுகம் என்பவர் கோட்டாமில் ஒன்றை வைத்திருந்தார். அவருக்கு மூன்று சகோதரர்கள் பாலன், கோபால், மகாலிங்கம் ஒரு கால் சற்று ஊனமுற்றவர் ஆவார், பார்க்கும் நமக்குத்தான் அவர் ஊனமுற்றவராக தெரிந்தார். ஆனால் அவர் அதனை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாத வர்கள். முஸ்லிம், தமிழ், சிங்களம் என எந்தப் பேதமும் இல்லாமல் அதிகமான நண்பர்களையுடையவராக அவர் விளங் கினார். மும்மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். நகைச்சுவை கொண்ட நாவன்மை உடையவர். எப்படிப்பட்ட வராயினும் தான் நாவன்மை மூலம் கவர்ந்து விடுவார். எந்த மனநிலை உள்ள வரும் மகாலிங்கத்திடம் பேசினால் பேச்சின் முடிவு சிறப்பாகவே முடிவு பெறும்.

எவர் வீட்டு விஷேசம் இருந்தாலும் சோக மாக இருந்தாலும் மகாலிங்கம் அங்கே பிரசன்னமாகி விடுவார். எப்படிப்பட்ட முரண்பாடாயினும் எத்தரப்பினரையும் பேசித் தீர்க்கும் மனநிலைக்கு கொண்டு வந்து சமரசம் செய்து விடுவார். உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், ஊர்ப்பெரியவர்கள், பொலிஸ் அதிகாரி களின் மட்டத்தில் மிகுந்த மரியாதைக்குரி யவராக கணிக்கப்பட்டார்.

அதனால் பொலிஸ் தகராறுகள், பதவி உயர்வுகள், இடமாற்றம், நியமனம், அபிவி ருத்தி போன்ற விடயங்களை லாவகமாக கையாண்டு காரியம் சாதித்துக் கொடுப்பார்.

இவ்வாறு மக்கள் தொண்டனாக விளங்கிய மகாலிங்கம் அவர்களுக்கு நீண்ட காலமாக ஒரு மனக்குறை இருந்து வந்தது.

மூதூரில் நாடகம், கூத்து, இசை, பட்டி மன்றம் போன்ற கலைகள் வளர வேண்டும் அதற்கு ஆதாரமாக அரங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற தன் ஆசையை அவ்வப்போது தனது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வார். அதற்கு செயலுருவம் கொடுக்கும் ஒருவருக்காக அவரது உள்ளம் ஏங்கியது. அவரது உள்ளத்தின் தாகத்தை தீர்க்கும் குளிர் நீரோடை போல தேடிய செல்வம் தடத்தில் கிடைத்தது போல வந்து வாய்த்தவர் சபாரத்தினம். மூதூர் பிரதான வீதியில் இருந்த உரக் களஞ்சியத்தில் (தற்போதைய வலயக் கல்வி அலுவலகம்) முகாமையாளராக இருந்தார். காணும் எவரையும் கவர்ந்து இழுக்கும் தோற்றம், சுகட்டை முடி, கலு கலு வென்ற அடர்த் தியான அழகு, மீசை யுடன் மேக்கப் இல்லா மலே சினிமாக் காரன் போல் இருப் பார் சபாரத்தினம் அவர்கள்.

ஒத்த இயல்புகள் உள்ளவர்கள் ஒன்று சேர்வார்கள் என்ற சிக்மன் பிறைடின் கூற்றுக்கிணங்க மகாலிங்கத்தின் எண்ணக் கருவிற்கு செயலுருவம் கொடுக்க சபாரத் தினம் முன்வந்தார்.

இருவருமாக சேர்ந்து நீதிமன்ற வீதியில் (மத்திய வீதி) அமைந்துள்ள பிள்ளையார் கோவில் வளவிற்கும் ஒரு அரங்கத்தை அமைத்தனர். அதற்கு ஆறுமுக அரங்கு எனப் பெயரிட்டனர். அன்று முதல் நாடகம் கச்சேரி, பட்டிமன்றம் என கலை கட்டியது. ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் விஷேட சொற்பொழிவுகள், நாடகங்கள், கச்சேரிகள், பட்டிமன்றம் என விடிய விடிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். மூதூரின் பல பாகங்களிலிருந்தும் பார்வையாளர்கள் வந்து குவிந்தனர். நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒலிபெருக்கி மூலம் கனீரென ஒலிக்கும். சில சமயங்களில் ஒலிபெருக்கி ஒத்துழைக்க மறுக்கும் போது நிகழ்ச்சிகள் சோலையிழப் பதைக் கண்ட மகாலிங்கம், சபாரத்தினம் தோழர்கள் ஆறுமுகம் அரங்குக்கென சொந்தமான ஒலிபெருக்கி சாதனத்தை கொல்வனவு செய்து அதற்கு மகா, சபா சவுன் சேவிஸ் எனப் பெயரிட்டனர். ஆறுமுக அரங்கு நிகழ்ச்சிகள் போக அவ்வொலி பெருக்கி சாதனத்தினை போது மக்கள் தேவைக்காக இலவசமாக வழங்கினர்.

மூதூர் மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக் கதாக இருந்த ஆறுமுக அரங்கம் அதன் நிகழ் வுகளும் 1990 வரை சிறப்பாக இறங்கியது.

தொடர்ச்சி 25 ஆம் பக்கம்

## மூதூரின் முக்கிய ஆண்டுகள் தொடர் - III

- 1942களில் சிங்களவர் வருகை.
- 1950 மூதூர் பன்சல உருவாக்கம்.
- 1952 சிங்களமொழிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.
- 1934 மூதூர் கிராம சபை உருவாக்கப்பட்டது.
- 1935 முதலாவது கிராம சபைத் தேர்தல் நடைபெற்றது.
- 1945 மீன்சந்தை, இறைச்சிக் கடை என்பன ஆரம்பிக்கப்பட்டது.
- 1965 பட்டிண சபையாகத் தரம் உயர்த்தப்பட்டது.
- 1973-98 வரை ஆணையாளர்களின் நிர்வாகம் நடைபெற்றது.
- 1966 முதலாவது பட்டின சபைத் தேர்தல் நடைபெற்றது.
- 1965 புதிய பட்டிண சபைக் காரியாலயம் அமைக்கப்பட்டது.
- 1965 வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது.
- 1994 மூதூர் பிரதேச சபை அமைக்கப்பட்டது.
- 1838 நொக்ஸ் வீதி அமைக்கப்பட்டது.
- 1860 கொல்லன் ஆற்று வீதி அமைக்கப்பட்டது. (மார்கட் றோட்)
- 1935 கோயில் வீதியில் உள்ள ஆற்றுக்கு மரப்பாலம் அமைக்கப்பட்டது.
- 1945 சின்னப்பால வீதி அமைக்கப்பட்டது.
- (மின்சார நிலைய வீதி)
- 1949 நொக்ஸ் வீதிக்கு வடிகால்
- அமைக்கப்பட்டது.
- 1942 வேடங்கந்து வீதி (நெய்தல் நகர் வீதி) திறக்கப்பட்டது.

உசாத்துணை : எம்.ஏ. சமது, 2003, கொட்டியாரப்பற்று வரலாறு, மூதூர்.



வஹார்தீன் முபீன்
MP NEWS Director



# மூதூர் வரலாறு தொடர் - III

# 1729 இல் மூதூர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாரங்கள்

எம்.எஸ்.எம். பிஸ்ரி
BBA, PGDE

மூதூரின் நாமத்தை உலகறியச் செய்த இலக்கிய கலாநிதி: வ.அ.இராசரத்தினம் அவர்களின் குறிப்பி லிருந்து ......

முத்தூர், மூதூர் என்று சொல்வதிலே மூதூரில் பிறந்த நமக்கெல்லாம் ஒரு பெருமை. மூதூர் என்பது முதுமையான ஊரென்பதை நான் உறுதிபடக்கூறுவேன்.

மூதூர் என்று பெயர் வைத்தவன் முஸ்லிமோ, தமிழனோ எனக்குத் தெரியாது. எவருக்குமே தெரியாது. ஆனால் அந்தப் பெயரை வைத்தவன் மகாதேவி, ஏனென்றால் மூதூர் என்றதைப் போல அமெரிக்க விளம்பரத் தன்மையுடைய தான ஒரு பெயரைச் சூட்ட நிச்சயமாக ஒரு மேதாவியாற்தான் முடியும். வாழ்க அந்த மேதாவி. ஆனால் நான் படித்த சரித்திர நூல்களிலே "கொட்டியார்" என்றுதான் நம்மூரின் பெயர் இருக்கின்றது. பழைய, உறுதி களிலும் கொட்டியார் என்றும், கொட்டியாபுரம் என்றுதான் எழுதப்பட்டிருக்கின்றது.

நம்மூர் நொக்ஸ், புளியமரத்துக்குக் கோட்டையாற்றுப் புளியமரம் என்பது ஜனரஞ்சகமான பெயர். நல்ல தண்ணீர் எடுக்கச் செல்லும் நம்மூர் கிழப் பெண்கள் "கோட்டையாற்றுக் கிணத்துக்குப் போகிறோம்" என்று சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன். தற்போது மூதூர் மத்திய கல்லூரி (தே.பா) அமைந்துள்ள இடத்தில் கண்டி மன்னன் இரண்டாம் சேனரத்தின் கோட்டை இருந்தது என்பது சரித்திரம்.

கோட்டையும், பக்கத்திலே ஆறும் இருந்ததால் கோட்டையாறு என்று பெயர் ஏற்பட்டு, அது கொட்டியார், கொட்டியாபுரம் என மருவியிருக்கலாம் என நான் அனுமானிக்கிறேன். கொட்டியாறு என்ற பெயரே சரித்திர நூல்களிலும் நம் ஊருக்குக் காணப்படுகிறது.

மூதூர் என்ற பெயர் நம்மூருக்கு எப்போது வந்தது? கடந்த பல ஆண்டுகளாக இதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதில் எனக்கு ஒரு அவா, ஏனென்றால் நான் மூதூரான். என் கிராமத்தின் ஒவ்வொரு மணற் குறுனியையும் நான் நேசிக்கிறேன்.

காலி புனித அலோசியஸ் கல்லூ ரியின் முன்னாள் அதிபரும், லத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம், போத்துக்கீஸ் ஆகிய மேல் நாட்டு மொழிகளிலும், பாளி, சிங்களம் ஆகிய கீழ் நாட்டு மொழி களிலும் பாண்டித்தியம் பெற்றவருமான அருள் திரு வீ. பேர்ணியோலா எஸ்.ஜே. அவர்கள் எழுதிய : **THE CATHOLIC CHURCH** என்ற நூலின் 2 ஆம் தொகுதி யில் 205 ஆம் பக்கத்தில் நான் மூதூர் என்ற சொல்லைக் கண்டேன். 1729 ம் ஆண்டில் பீற்றர் வைற்ஸ் என்ற டச்சு தேசாதிபதி கண்டிமன்னனுக்கு ஒரு தூது அனுப்பினான். அதில் கத்தோலிங்க கோயில்கள் இருக்குமிடத்தைப் பற்றிச் சொல்கையில் பள்ளேகல, சீதாவாக்க, மூதூர் ஆகிய இடங்களில் பெரிய கத்தோலிக்க கோயில்கள் இருந் தன எனத் தன் ஒற்றர் மூலமாக அறிந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

இந்தக் குறிப்பிலேதான் "மூதூர்" காணப்படுகிறது. அதில் மூதூர் "MOEDOER" என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தைக்கு அடிக்குறிப்பு எழுதிய நூலாசிரியர் **MOEDOER** என்பது **A Village Close To Kottiyar** என எழுதியுள்ளார்.

ஆகவே மூதூர் என்ற நம்மூரின் பெயர் 1729 ஆம் ஆண்டிலும் பயயன்படுத்தப் பட்டுள்ளது. அப்படியானால் இதற்கு பல நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் இப் பெயர் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கும்.

இதுதான் எனக்குத் தெரிந்த சரித்திரம். ஆனால் இந்த மண்ணிலே இனி வரவிருக்கும் ஒரு சரித்திரப் பட்டதாரி இதனை மேலும் ஆராய வேண்டும். வரவிருக்கும் அந்த சரித்திர மாணவனுக்கும், எனது ஊரவர்களுக்கும், சர்வ கலாசாலையில் அடியெடுத்து வைக்காத நான் இக்குறிப்புகளைச் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் ஆராய வேண்டும் என்பதற்காக தொடர்ந்து எனக்குத் தெரிந்த நமது பாரம்பரியங்களை "முத்தொளி" மூலம் தெரியப்படுத்துவேன்.

**வ.அ. இராசரத்தினம்**

(ஆதாரம் : முத்தொளி சஞ்சிகை - 1994 : பக் : 32)




தோணி சிறுகதை மூலம் மூதூரின் நாமத்தை உலகறியச் செய்தவர். மூதூரை பிறப்பிடமாகக் கொண்ட வஸ்தியான் அந்தோனி இராசரத்தினம் (வ.அ. இராசரத்தினம்) அவர்கள். இவர் ஓர் ஓய்வுபெற்ற அதிபராவார். நாடறிந்த எழுத்தாளர். மூதூர் பகுதியில் முதலாவதாக வெளியிடப்பட்ட சிறுகதை நூல் "தோணி" 1965 ம் ஆண்டு சாகித்ய மண்டலப் பரிசு பெற்றது.

மூதூர் கடல் பிராந்தியங்களை அண்டி வாழ்ந்த மக்களின் வாழ்வியல் அம்சங்களை சித்தரிப்பதாக அக்கதை அமைந்துள்ளது. அக்கரை இலக்கியம், ஈழத்துச் சிறுகதை, மஞ்சரி போன்ற நூல்களில் மறு பிரசுரமான இச்சிறுகதை ஆங்கிலம், சிங்களம், மலையாளம், ரஷ்ய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

தோணி சிறுகதை க.பொ.த. (சாதாரண தர) தமிழ்ப்பாட நூலில் பாடவிதானமாக சேர்க்கப்பட்டு போதிக்கப்பட்டு வந்துள்ளது.

இவரது படைப்புக்கள் இலங்கைப் பத்திரிகைகளில் பிரசுரமானதோடு மட்டுமல்லாமல் இலங்கை வானொலி, அகில இந்திய வானொலி, சிங்கப்பூர் வானொலி போன்றவைகளிலும் ஒலி பரப்பப்பட்டு வந்துள்ளது.

இதன்மூலம் மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இலக்கிய கலாநிதி வ.அ. இராசரத்தினம் அவர்கள் தான் பிறந்த ஊரான மூதூரின் நாமத்தை இலங்கையில் மட்டுமல்லாமல் உலகமெங்கும் அறியச் செய்தவர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.



இலக்கிய கலாநிதி வ.அ. இராசரத்தினம்

## மக்களின் தொண்டன் மகாலிங்கம்

பின் வந்த காலத்தில் யுத்த சூழ்நிலை காரணமாக ஆறுமுக அரங்கும் அதன் நிகழ்வுகளும் மக்கள் வாழ்க்விலிருந்து மெல்ல மறைந்து போனது

இன்று அந்த அரங்கு தூர்ந்து போன நிலையில் காணப்படுகின்றது. நடிகர்களும், பாடகர்களும், நாட்டியர்களாலும் நிரம்பி வழிந்த அரங்கு தனித்துக் கிடந்தது. மீண்டும் ஒரு புணர் ஜென்மத்துக்காக காத்திருக்கின்றது. ஆம் மீண்டும் புத்துயிர் கொடுக்க பிறந்து வரப் போகின்ற மகாலிங்கம், சபாரத்தினம் யார?? எங்கே...???

"மக்களின் தொண்டன் மகாலிங்கம் நீ வாழ்க"

மக்களால் போற்றிப் பாடப்பட்ட பாடல்.

# தகவல் அறியும் சட்டம்...

பகுதி ஏ : பொதுவானவை :

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டமானது சுற்றாடலைப் பாது காத்துக் கொள்வதற்கும் நாட்டின் சகல சூழற் தொகுதியினை முகாமைத்துவம் செய்வ தற்கான பிரிவுகளை உள்ளடக்கிய விரிவான சட்டமாகும்.

மனித செயற்பாடுகளினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதல் இச்சட்டத்தின் பிரிவுகளின் கீழ் நிருவகிகப்படுகின்றது. கைத்தொழிற்சாலைகளிருந்து வெளிவருகின்ற திண்மக்கழிவுகள் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம் உட்பட ஒலி, அதிர்வு, வளி, மற்றும் நிலம் மாசுபடுதல் என்பனவும் இச்சட்டத்தின்கீழ் கண்காணிக்கப்படுகின்றன. அது தவிர, பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனைகளை தடைசெய்யும் கட்டுப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளும் இச்சட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

எவ்வாறிருப்பினும் அதிகமான மக்கள் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் உணராமையால் சுற்றாடல் மாசடைதல் மறறும் இயற்கை வளச்சசுரண்டல் என்பன போன்ற சட்டவிரோத செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை.

---

## SECURITY AWARENESS
## OF SMART PHONE USERS

சில சமயங்களில் அது போல லிங்கை நீங்கள் கிளிக் செய்வது மூலம் உங்களுடைய தொலைபேசிக்கு வைரஸ் மற்றும் நோட்டிபிகேஷன் Pop-Up மெஸேஜஸ் எல்லாம் வருவதற்கான சந்தர்ப்பம் உண்டு.

இதே போல் வரும் லிங்கினை நீங்கள் கிளிக் செய்யும் முன் கணினி அறிவு உள்ள நண்பர்களுக்கு அனுப்பி விட்டு அதனுடைய உண்மை தன்மையை அறிந்து கொண்டபின் அதனைக் கிளிக் செய்யவும்.

அனைத்து லிங்க்கினையும் அல்ல நீங்கள் வெற்றியாளர் எனவரும் லிங்கினை மாத்திரமே. உதாரணமாக உங்களுக்கு இந்த புகைப்படத்தில் இருப்பது போல் உங்களுக்கு லிங்கினை கிளிக் செய்தால்வரும் தயவுசெய்து இவ்வாறான மெசேஜ்களை தவிர்த்துக் கொள்ளவும் உங்களுடைய நலனுக்காக வேண்டி எங்களுடைய இந்தப் பதிவு.

# மூதூர் மீனவர்களும்....

அனர்த்தங்கள் அனைத்துக்கும் முகம் கொடுக்கும் மீனவச் சமூகத்தின், மிக முக்கிய பிரச்சனையான கடலரிப்பு என்பது கடந்த 10 வருட கால பகுதிக்குள் சுமார் 300M தூரம் தரையினை கடலுக்குள் கொண்டு சென்றுள்ளதால், பெரும்பாலான மக்களின் குடியிருப்பு, வியாபார நிலையங்கள், மற்றும் வாடிகள் என்பன அழிந்துள்ளது. இதேபோல் 2004 இல் ஏற்பட்ட சுனாமி பேரலையால் சுமார் 1304 வீடுகள் அழிக்கப்பட்டு அவைகளில் ஒரு பகுதி வீடுகள் மீளக்கட்டப் பட்டு வழங்கப்பட்டபோதும் சுமார் 64 குடும்பங்களுக்கு இன்னும் வீடுகள் வழங்கப்படாமல் இருப்பது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

வருமானத்தை அதிகரிப்பதற்கும், அதனை நிலைபேறானதாக பேணுவதற்கும், அதனுடாக மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் அபிவிருத்திப் பங்காளர்கள் வழிகோலுவதுடன், அக்கிராமங்களில் காணப்படும் உட்கட்டுமான வசதிகளை சீர் செய்து வழங்குவதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

பொதுவாக மீன்பிடிக்கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக காணப்படுவதை அவதானிக்கமுடியும். மூதூர் பிரதேசத்தை பொறுத்தவரையிலும் அது விதிவிலக்கல்ல. இக்கிரா மங்களில் அழிவுற்று காணப்படும் பாதைகள் விசேடமாக மீன்பிடித் தளங்களுக்கு செல்லும் பாதைகள் உள்ளடங்களாக அனைத்து பாதை களும் செப்பனிடப்படுவதுடன் அவற்றிக்கு மின்சார வசதிகள் வழங்குதல் வேண்டும். அதேபோல், மினவர்களின் மீன்படி உப கரணங்களைப் பாதுகாப்பதற்காக மீன்பிடி துறைமுகம் அமைத்தல், சனசமுக நிலையம் அமைத்தல், குளங்களுக்கும் ஆறு களுக்கும் செல்லும் பாதைகளை உருவாக்கல் போன்ற முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் இம்மக்களுக்கான நிரந்தர வீட்டு வசதிகளை வழங்குவதையும் அபிவிருத்திப் பங்காளர்களர்கள் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

மீன்பிடித்தலின் பின்னரான அழிவுகளை தடுக்கும் பொருட்டு மூதூர் பிரதேசத்தில் ஐஸ் தொழிற்சாலைகளை நிறுவுதல், Chill room களை அமைத்தல், மீன் ஏற்றுவதற்கு சிறந்த வாகனங்கள் ஒழுங் கமைத்தல், புதிய தொழிநுட்பத்தில் கருவாடு பதனிடும் தொழிற் சாலைகள் அமைத்தல், டின்மீன் தயாரித்தல் தொழிற் சாலைகளை நிறுவுதல் என்பனவும் முக்கிய விடயமாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

அபிவிருத்திப் பங்காளர்கள் (Development stake holders) பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு, இப்பிரச்சனைக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக, எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான், எமது பிரதேச மீனவர்களின் வளர்ச்சிக்கு நாம் உதவுவதுடன் அம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், சமூக மட்ட வளர்ச்சியை உருவாக்கவும் முடியும்.

# கல்வியலாளர்களும், சிந்தனைவாதிகளும்

விமர்சனத்திற்குட்படுத்தல் எனும் பிரதான கூறுகளை அடிப்படையாக கொண்டு தொகுக்கப்பட்டிருப்பதுடன் சமூகப் பிறழ்ச்சி அரசிலை ஆய்வு செய்து, அவற்றை சமூக அங்கத்தவர்களுக்கு விபரிப்பதனூடக, அவர்களை அறி/ட்டி, இறுதியாக சமூக அங்கத்தவர்களின் பங்கேற்புடன் கோட்பாட்டு அடிப்படையிலோ அல்லது எண்ணக்கரு உருவாக்கல் மூலமாகவோ அரசியலானது மீள்திருத்தம் செய்யப்படல் வேண்டும். ஆனாலும் முறையாக கற்றவர்களும், சிந்தனை வாதிகளும் இந்த படிமுமுறைகளில் பங்கேற்காதவரை சமூக அரிசியலில் மாற்றம் என்பது குதிரைக் கொம்பாகவே தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

மேலும் அரசியல் தொடர்பான வெவ்வேறு கருத்தியல்கள் பொதுவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அதிகாரம்சார்ந்த கருத்தியல்களை தாண்டி பிரசைகள் பங்கேற்கும் சமூகப் பயன்பாடுகள் பற்றிய தெளிவு மக்களுக்கு நிச்சயமாக வழங்கப்பட வேண்டியதொன்றாகும். அவற்றையும் சமூகத்திலுள்ள கல்வியலாளர்களே முன்னெடுக்க வேண்டும்.

ஆக அரசியல் மாற்றத்தை வேண்டி நிற்கின்ற ஒரு சமூகத்திற்கு கல்வியலாளர்களினதும், சிந்தனைவாதிகளினதும் மற்றும் மூளைசாலிகளினதும், வகிபாகம் இன்றியமையாத ஒன்றாகும். என்பதுடன் முக்கியமாக துறைசார்ந்த கற்றறிந்தவர்களின் பிரசன்னம் கட்டாயமானதுமாகும். அது மாத்திரமல்லாமல் கற்றவர்களின் அரசியல் பற்றி உலக அரசியலும், உள்நாட்டு அரசியலும் எமக்கு பல்வேறு எடுத்துக்காட்டுகளை விட்டுச் சென்றிருக்கின்றன. உலக அரசியலில் இம்ரான் கான் தொட்டு அர்துகான் வரையில் அந்த உதாரணங்கள் நீட்சி அடையகின்ற அதே வேளை உள்நாட்டு அரசியலில் ஜே. ஆர் ஜெயவர்த்தனா தொடக்கம் மறைந்த திருகொணமலை பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீது வரை எடுத்துக்காட்டுகள் தொடர்கின்றன.

ஆகவே தான் கல்வியலாளர்களும், சிந்தனைவாதிகளும் அரசியலுக்குள் நுழைதல் வேண்டும். சமூக அரசியல் மாற்றம் எனப்படுவது கல்வியோடு இணைந்த ஆளுமையில் மட்டுமே முழுமையாக தங்கியுள்ள ஒன்றாகும்.

தொடரும்.........

## பொலிஸ் ஆலோசனை சபை கூட்டம்



கடந்த 14 ஞாயிறு காலை 9.00 மணியளவில் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திசாநாயக்க அவர்களின் தலைமையில் பொலிஸ் ஆலோசனை சபை கூட்டம் நடைபெற்றது.

மூதூரில் நடக்கும் கெட்ட செயல்கள் (சூது, களவு) போன்ற பல வகையான முறைப்பாடுகளை பள்ளி நிருவாகத்தின் ஊடாக அறிக்கையினைப் பெற்று மூதூர் பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் சட்டநடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொது மக்கள் தங்கள் மஹல்லாவில் நடக்கும் பாவம் மற்றும் குற்றச் செயல்களைக் கண்டறிந்து பள்ளி நிருவாகத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

## சேவை நலன் பாராட்டு



55 ஆவது வயதில் கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் எஸ்.எம்.உவைஸ் (ஞடீஞ-1) அவர்கள் கடமை புரிந்த திஃமூஃஅல்-மினா வித்தியாலயம்,திஃமூஃசதாம் வித்தியாலயம்,திஃமூஃஅந்-நஹார் ம.வி,வலயக் கணனி வள நிலையம் மற்றும் திஃமூஃபுர்கானியா வித்தியாலயம் ஆகிய நிலையங்களுக்கு தனது இறுதிச் சம்பளத்தைக் கொண்டு கபேட்,போட்டோ பிரதி,சவுனட் சிஸ்டம் பைல் கபேட் என்பவற்றை வழங்கியுள்ளார்.

ஏன் இந்த உதவியை செய்யவேண்டும் என்று கேட்டதற்கு தான் இந்நிலையங்களில் கடமை புரியும் போது அரச மற்றும் பொதுச் சொத்துக்கள் என்பன கடமை நிமித்தம் மற்றும் என்னை அறியாமல் ஒருசில வேளைகளில் சுய தேவைக்கும் பயன்படுத்தி இருக்க வாய்ப்புகள் உண்டு என்பதை கருத்திற்கொண்டு தனது இறுதி பங்களிப்பை இவ்வாறு அளிப்பதாக அவர் கூறியது உண்மையில் பாராட்டுக்குரிய விடயமாகும்.

அரசபணியில் இருந்து ஓய்வுபெரும் நபர்கள் இனிவரும் காலங்களில் இவ்வாறான ஒரு நல்ல கலாசாரத்தை நடைமுறைப்படுத்த இவர் வழிகாட்டியுள்ளார் என்பதை இவ்விடத்தில் கூறியாகவேண்டும். இவரது ஓய்வு வாழ்வு சமூகத்திற்கு பயனுள்ளதாக அமையவேண்டுகிறோம்.

## மூதூர் பிரதேச செயலக, பிரதேச செயலாளர் பதவியேற்பு



சுமார் எட்டு மாதகாலமாக பதில் பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த M.B.M. **முபாறக்** அவர்கள் கடந்த (05.03.2021) வெள்ளிக்கிழமை காலை 10:00 மணியளவில் மூதூர் பிரதேச செயலாளராக, உத்தியோக பூர்வமாக தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், மூதூர் பிரதேச சபை தவிசாளர், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி, கட்டைபறிச்சான் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, மூதூர், சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மூதூர் வர்த்தக சங்கத் தலைவர் உற்பட பிரதேசத்திற்கான அரசியல் பிரமுகர்கள், இன்னும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# முத்திதழ் செய்திகள்

## 35 வருடங்களின் பின் ஓர் ஒன்றுகூடல்
## Hilalian 87 Batch



அல்ஹிலால் பாடசாலையில் 1976 ஆம் ஆண்டு முதலாம் தரத்தில் கற்க ஆரம்பித்து 1987 ஆம் ஆண்டு O/L வரை கற்ற பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் இன்று அல்ஹிலால் பாடசாலை ஒன்றுகூடல் நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வு குறித்த Batch இல் கல்வி கற்ற Sareef Mohamad Naleem அவர்களின் தலைமையில் ஒருங்கிணைப்பு செய்யப் பட்ட தோடு குறித்த நிகழ்வில் 90% பழைய மாண வர்களும் கலந்து தங்களின் பாடசாலை வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்து கொண்டமையும் தங்களுடன் கற்றவர்களில் மரணித்தவர்களுக்கான துஆ பிரார்த்தனையும் நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

## சேவை நலன் பாராட்டு



மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மூதூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுமார் 4 வருடகாலமாக தொடர்ந்தேர்ச்சியாக கடமையாற்றி வந்த திருமதி றைஸா பானு டில்சாத் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிறந்த சேவை நலனை பாராட்டி இன்று [14] 5:00 அ மணியளவில் அக்கரைச்சேனை பல்தேவைக் கட்டடத் தொகுதியில் அக்கரைச்சேனை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் எம்.ஐ. சூசவாஹீர் தலைமையில் நடைபெற்றது இதன்போது முன்னாள் கிராம உத்தியோகத்தர் கே.எம்.மதீன், மற்றும் சங்க உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.புதிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக திருமதி. எஸ். முபாஜினா பங்குபற்றுதலுடன் சேவை நலன் பாராட்டுச் சின்னம் ஒன்று எம்.ஐ. சூசவாஹீர் தலைவரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலவச மருத்துவ முகாம்



*Lion's Club of Muthur United* சார்பில் கடந்த (20) இடம்பெற்ற நீரிழிவு நோய்க்கு எதிரான விழிப்புணர்வு வாகன பேரணி மற்றும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் லயன்ஸ் பிராந்தியம் 7 ஐ சேர்ந்த 10 குழுக்கள் பங்குகொண்டு திருகோணமலை நகரத்தில் ஆரம்பித்து மூதூரில் நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## திரைப்பட வெளியீடு




வெருகல் பகுதியை மையமாகக் கொண்டு இயக்கப்பட்டுள்ள **"ஒற்றைச்சிறகு"** எனும் முழு நீளத் திரைப்படம் தொடர்பான ஊடக சந்திப்பு திருகோணமலையிலுள்ள தனியார் விடுதியொன்றில் கடந்த 01 ஆம் திகதி மாலை இடம்பெற்றது.

நமது பிரதேச கலைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் இம்மாதம் 14 ஆம் திகதி திருகோணமலை நெல்சன் திரையரங்கில் திரையிடப்படவுள்ளது. இப்படத்தை வெருகலைச் சேர்ந்த ஜனா மோகேந்திரன் எனும் இளம் இயக்குநர் இயக்கியுள்ளார்.






**T.RANA AFROOS**
GRADE 11
T/M/M.M.L.C






**F. F. SIHARA**
GRADE 12
T/MU/AL-MINA M.V





**INNAMUL HASAN**
NEITHAL NAGAR
MUTUR






**NF.SANHA**
GRADE 07
T/AL HUSAINIYA.V





**RANA HAANI**
AKKARAICHENAI
MUTUR.





**T.FARHATH JAZA**
GRADE 09
MUTUR.





**MBM.ASSAAL**
GRADE 08
T/M/M.C.C (N.S)

**வர்ணம் தீட்டிய ஓவியங்களையும், உங்களது புகைப்படத்தையும் 074 0818782 எனும் WhatsApp இலக்கத்திற்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.**













மூதூரில் 15 வது வருடத்தை நோக்கிய சிறப்பான சேவையில்

# Muthur PC World

*The Solution You Need*


- Security System Installation
- Maintance and Repairing
- 24/7 Emergency Service
- Hik Vision Branded Cameras
- 02 Years Warrenty



- PC Formet and Services
- PC and Laptop Repair
- All PC & Laptop Accessories
- New & Used Computer Sales
- Networking



- Plastics Ceiling
- Jipsom Ceiling
- ` I ' Panel Ceiling
- LED Light Settings



வேறு எங்கும் கிடைக்காத விசேட சலுகைகளோடு
CCTV, Ceiling தவணை கட்டண முறையில்
பெற்றுக்கொள்ள முடியும்

0779907929 Main Street, Mutur

# PEARL GRAND

*Beyond Your Expectations*




Moments made Perfect

More than You Expected

- Newly Refurbished and Expanded Pearl Grand
- With state of the Art Technology
- Consisting of two story function halls
- Separate halls to accommodate Gents and ladies functions
- With the capacity to accommodate more than 1000 guests
- Celebrate with grandeur at pearl grand
- Make unforgettable memories with our outstanding service
- A perfect venue for a destination wedding
- All Covid 19 precautions are strictly in place with MOH approval
- Contact now to reserve your memorable events
- We are always on hand to assist with your perfect occasions

Knox Road, Mutur | Pearl Grand | 0771544488 0752342343

# Cardi O Pharmacy

Knox Road, Mutur. Tel : 077 4 203 203

PHARMACY



The Healthcare you've always dreamed of.

Dr. N. Nifras (M.B.B.S)
அவர்களின் வைத்திய சேவையினை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சீனி (FBS),
கொலஸ்ட்ரோல் (Lipid Profile),
தைரொய்ட் (TSH)
அனைத்துவித இரத்த பரிசோதனைகளையும் எம்மிடம் செய்துகொள்ள முடியும்.



OPENING TIME : 8.00 AM - 11.00PM

Knox Road Junction, Mutur - 05

077 4 203 203

முத்தூர் மாதாந்த சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற விரும்பினால் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

0771020030

# Friendly Cafe

OPEN AT 4.30pm - 11pm



SPECIAL MENU

- Egg Drop Soup with Beef
- Malay Chicken Sandwich
- Crispy Fried Chicken
- Fried Fish
- Friendly Burger

ORDER NOW
+94 77 237 236 0
+94 75 75 42 42 2

friendlycafeinfo@gmail.com
Batticaloa Road, Periyapalam Mutur - 05, Sri Lanka


Layout By : sanoosfm